1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு சித்திரை மாதம் 26-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 16-ம் இலக்கம்



## மருதமடு மாதாவின் மலர்ப் பாதத்தில் இரண்டாவது முறையாக நடந்தேறிய

# அகில-இலங்கை மரியாயின்சேனைச் சமாகமத்தின் ஞாபக இதழ்

### கொழும்பு அதிமேற்றிராணியாரினதும், இலங்கையின் ஏனைய மேற்றிராணிமாரினதும் ஆதரவிலே 13-4-56 முதல் 16-4-56 வரை சம்பிரமமாக நிகழ்ந்த சமாகமம்

எமதுஅருமையான சேனையாளரே!

"நாம் இங்கே இருப்பது நல்லது." அர்ச். இராயப்பர் தமது உடன்சீஷர்கள்இருவருடன் தபோர்மலையிலெமது ஆண்டவரின் மகிமைக்காட்சியில் பரவசமான வேளையிலே இவ்வாறு பிரமிப்புடன் கூறினர். அன்றியும் இக்காட்சி மறைந்துபோகும் தருணத்தில் "இங்கே நாம் மூன்றுகூடாரங்களை அமைப்போமாக" என்றும் வசனித்தார். சுவிசேஷகர் குறிப்பிடுவதுபோல் அவர் தாம்சொல்வது இன்னதென்று அறியவில்லை. ஒருபக்கத்தில் சந்தோஷத்தினாலும், மறுபக்கத்தில் காட்சி மறைவதுபற்றிய சலிப்பினாலும் ஏவப்பட்டு, பரவசம் நீடிக்கவேண்டுமென்ற ஆவலாற்றூண்டப்பட்டு இவ்விதம்பேசலானர்.

"நாம் இங்கேஇருப்பது நல்லது"— இங்கே நாம் சந்தோஷமாயிருக்கிறோம்; எப்பொழுதும் இப்படியிருந்தாலோ! அருமைச் சேனையாளரே! நெடும்பிரயாணஞ் செய்துகளைத்து மாதாவின் திருப்பாதத்தில் நீங்கள் ஒன்றுகூடியிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இந்த வார்த்தைகளே உங்கள்உள்ளத்திலிருந்தும் இவ்வேளை எழும்புகின்றன என்பது எமதுஉறுதியான நம்பிக்கை.

பிரயாணக்களைப்பு உங்களை வாட்டுகிறது. இங்கு உங்களுக்கிருக்கும் இல்லிடம், வெப்பமான காலநிலை, உணவு, அடர்ந்த கிரமவரிசையாவும் உங்கள் சுகத்தையும், மனதின் நிலைபரத்தையும் வாதிக்கும். ஆனால், இந்தச் சமாகமத்தில் உங்களுக்கிருக்கும் ஆர்வத்திலும், அந்தரங்கஅக்களிப்பிலும் இவையெல்லாம் அற்றுப்போகின்றன.

நீங்கள் இலங்கையின் சகலபபாகங்களிலுமிருந்து சகோதர,சகோதரிகளாக ஒருங்கு சேர்ந்திருக்கிறீர்கள். யாவரிலும் ஒரேமனப்போக்குண்டு. யாவரும் தேவனுக்காக ஒரேசேனையில் ஈடுபட்டிருக்கிறீர்கள். யாவரிடத்திலும் சேனைக்குரிய பிரதான அடையாளமான சகோதரமனப்பான்மை விளங்குகிறது. ஆகையால், நீங்கள் இங்கு ஒருங்குசேர்வதில் அக்களிப்புக்கொள்ளுகிறீர்கள். பெருந்தொகையான ஞானத்தலைவர்களும், சேனைஅன்பர்களுமான குருப்பிரசாதிகள் மத்தியில் நீங்கள் வந்திருப்பதைப்பற்றி இன்பம் கொள்ளுகிறீர்கள். சேனைச் சமாகமத்தையே தங்கள் ஒரே கரிசனையாகக் கொண்டு இவர்கள் உங்களுடன் இந் நாட்களைச் செலவிடுகிறார்கள்.

மருதமடுத்திருப்பதியில் இருப்பதைப்பற்றி நீங்கள் விசேஷஇன்பம் அடைகிறீர்கள். ஐந்துவருடங்களின் முன் இலங்கைமரியாயின்சேனை தனது முதலாவது அகிலஇலங்கைச்சமாகமத்தை நடத்தியது. மடுப்பதியையே அதற்கேற்றஇடமாகத் தெரிந்துகொண்டது. இவ்வருடமும் சேனை த்திஸ் அதேதீர்மானத்தையே செய்துகொண்டது. இவ்விததீர்மானத்துக்குக் காரணம், உல்லாசப்பிரயாண உவகையன்று. மரியாயின்பாசம் சேனையின் அம்சமாகும். விசுவாசத்தால் ஏவப்படும் தாகமே பரமதாயை மடுப்பதியிற்தேடிவர உங்களைத் தூண்டியது. இங்கேயே மாதாவின் அற்புத திருச்சுரூபம் இலங்கைத் திருச்சபையின் சரித்திரத்தைப் பூரணமாக நினைவூட்டுகின்றது.

மாந்தை ஆலயத்திலிருந்து இங்கு கொண்டுவரப்பட்ட இந்தஅற்புததிருச்சுரூபம் போர்த்துக்கேய குருமாரால் சுவிசேஷம் முதன்முதலாக எங்களுக்குப் போதிக்கப்பட்டதையும், அர்ச். சவேரியார் இங்கு விஜயம்செய்ததையும் நினைவூட்டுகிறதல்லவா? ஒல்லாந்தரின் வேதகலாபனை தொடர்ந்துவந்தது. ஆயரிடமிருந்து பிரிக்கப்பட்ட விசுவாசிகள் மாதாவின்திருச்சுரூபத்தைச் சுற்றி வளைந்துகொண்டார்கள். சுரூபத்தைத் தங்களுடன் எடுத்துக்கொண்டு (1698) கண்டி இராச்சியத்தைச் சேர்ந்ததாய்ப் பாதுகாப்புக்குரிய இடமாயிருந்த இந்தமடுப்பதிக்கே ஓடிவந்தார்கள். இவ்விடத்திலேயே ஆசா. யோசேவாஸ்சுவாமிகளின் உடன்ஊழியரான வெளுஓசுவாமியாரைச் சந்தித்தார்கள். 30வருடங்களுக்குமேற்பட மரியாயுடன் தனித்திருந்து அவளுடைய செபமாலைமூலமாகத் தங்கள்



சமாகமத்தை ஆரம்பித்து வைத்தார்

விசுவாசத்தையும், பக்திவேகத்தையும் காப்பாற்றிக் கொண்டார்கள். இந்த நிலைமையிலே அவர்களைத்தரிசித்த வெளுஓ சுவாமியார் இந்த இடத்தைத் தேவதாயார்தாமே தெரிந்துகொண்டாரென உணர்ந்தார். ஓர் ஆலயத்தைக் கட்டியெழுப்பினர் (1690 — 1700). அவருக்குப்பின்வந்த தவோரு சுவாமியார் (1701) ஆலயத்தைத் திருத்தியமைத்தார். ஆனால் சிறிது காலத்தில் ஓர் கொள்ளைநோய் தொடங்கியது. கிராமவாசிகள் சிதறடிக்கப்பட்டார்கள். அவர்கள் திருச்சுரூபத்தைத் தங்களுடன் எடுத்துக்கொண்டு கிராமத்துக்குக் கிராமம் திரிந்தார்கள். ஈற்றில் வேதகலாபனை முடிவெய்தியது. கடந்த நூற்றுண்டின் முற்பகுதியில் மடுப்பதியை மாதா திரும்பவும் அடைந்தாள். இன்று மடுப்பதியானது உண்மையாகவே இலங்கையில் விசுவாசத்தின் அரியநடுநாயகமாக விளங்குகிறது. ஆகவே, "நாம் இங்கேருப்பது நல்லது" என்று கூடியஆர்ப்பரிப்புடன் கூறுவீர்கள்.

சரித்திரப்பெருமைவாய்ந்த மரியாயின் திருப்பதிஆயரான நாமும் மரியாயின்நாமத்தால் அதே வார்த்தைகளை உங்களுக்குக்கூற எமக்கு விடைதாருங்கள். தம்மைச்சூழவர உங்களைக் கொண்டிருக்க மாதாவும் இன்பம் கொள்ளுகிறாள். உங்கள் பிரசன்னத்தைப் பாராட்டுகிறாள். நமது திருப்பதியை உங்கள் சமாகமஸ்தலமாகத் தெரிந்துகொண்டதற்காக நன்றிகூறுகிறாள். தமதுசேனையாளர் செபத்திற்கும், வேத ஆராய்ச்சிக்குமாகத் தம்மைச் சூழ்ந்திருப்பதைப்பற்றி விசேஷ ஆறுதல் அடைகின்றாள். முன்னொருநாள் நடந்ததுபோல் ஆண்டவராகிய இரட்சகர்மட்டில் நன்றிததும்பும் தோத்திரகீதமாகிய "என் ஆத்துமமானது ஆண்டவரை மகிமைப்படுத்துகிறது" என்ற வார்த்தைகள் அவளுடைய உள்ளத்திலிருந்தும், உதடுகளிலிருந்தும் மேலெழும்புகின்றன.

உலகசரித்திர ஆரம்பத்தில் விடுக்கப்பட்டதும், உலகமுடிவுபரியந்தம் நிறைவேறப் போவதுமாகிய ஒரு தெய்வீக தீர்க்கதரிசன வார்த்தையையும் இச்சமயத்தில் உங்களுக்கு நினைவூட்ட அனுமதி தாருங்கள். "உனக்கும் ஸ்திரிக்கும், அவள்வித்துக்கும் உன் வித்துக்கும்இடையே பகையை உண்டாக்குவோம்." அந்தகாரத்தின்பலங்கள் திருச்சபையைஎதிர்த்து நிர்மூலமாக்கிவிட என்றும் ஆரவாரஞ் செய்கின்றன. பலதேசங்களில் ஏமாற்று

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## நீந்துவதில் பிரசித்திபெற்றவள்

ஆங்கிலேயகால்வாயை எக்காலத்திலாவது நீந்தித்தாண்டிய இளமங்கையென்று பிரஸ்தாபம்பெற்ற செல்வி மரிலின் பெல்என்ற பாடசாலையிற் கல்வி பயிலும் 17 வயதுடைய கனடா தேசபெண்மணி மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்திருக்கின்றாள். இவள் சென்றவருடம் ஆங்கிலேய கால்வாயைப் 14 மணித்தியாலம் 36நிமிஷத்தில் நீந்திக்கடந்தாள். 1954-ம் ஆண்டு இவள் ஒன்ரேறியோவாவியை முதன்முதலாக நீந்திக்கடந்தபோதுதான் நீந்துவதில்உலகப்பிரசித்திபெற்றாள்.

## பிரபுகுமாரனின் குருபதவி

இங்கிலாந்திலே வைக்கவுண்ட் சிட்மத்பிரபுவின் ஆருவது புதல்வரான கௌரவ றலே அடிங்ரன் அவர்கள் லண்டன் நகரிலே சென்றபங்குனிமாதம் 11-ந் திகதியன்று லண்டன்நகர் ஒறேற்றறியிலே கருதினல் கிறிவ்வின் ஆண்டவரால் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். இவர் டவுண் சைட்டிலும், கேம்பிறிட்ஜிலே பெம்புறோக்கல்லூரியிலும் கல்வி பயின்றவர். இரண்டாவது உலகயுத்தத்திலே துப்பாக்கிப் படையிற்சேர்ந்து சேவைசெய்தவர். இவருடன் வண. தமியென் லூட் அவர்களும் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றார். முன்னர்இவர் ஓர்புரொட்டஸ்தாந்தராயிருந்து மனந்திரும்பியவர்.

## பெரோனின்சட்டம் நின்றது

ஆர்ஜென்ரீனவிலே ஜெனறல் பெரோனின் ஆட்சிகாலத்தில் நடைமுறைக்குவந்த விவாகரத்து நடவடிக்கைகளெல்லாம் புதியஅரசாங்கம் பிறப்பித்துள்ள சட்டம்ஒன்றாலே நிறுத்தப்பட்டிருக்கின்றன. கணவனே, அன்றேல் மனைவியோ இன்னுஞ்சீவனேடிருக்கும்போது, அவர்களுள் எவராவது திரும்ப விவாகஞ்செய்வதும் இந்தச்சட்டத்தாலே விலக்கப்பட்டுள்ளது. திருச்சபையையும், அதன் சன்மார்க்க தர்மத்தையும் எதிர்த்து அந்நாட்டின் முன்னைநாள் ஜனதிபதி பெரோன் தொடக்கிநடத்திய போராட்டத்தின் பிரதான விளைவுகளில்ஒன்றாய் அவரால் 1954-ம் ஆண்டு ஆக்கப்பெற்று நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட விவாகரத்துச்சட்டம் இத்தாலே அழிக்கப்படலாயிற்று. ஆர்ஜென்ரீனவிலே நீதிஸ்தலமூலம் தம்பதிகள்இருவர் தம்முளே முற்றாகப் பிரிந்துகொள்ளலாம். ஆனல், அவர்கள் திரும்பவும் விவாகஞ்செய்ய அனுமதிக்கப் படமாட்டார்கள். புதியசட்டத்தை அரசாங்கம் பிறப்பித்ததையிட்டுப் புவெனேஸ்அயேர்ஸ் மாகாணமுழுவதிலுமுள்ள கோவில்களிலெல்லாம் தேவதோத்திரபூசைகள் நிறைவேறின.

## குருவாகவர ஆசிக்கின்றார்

அநேகவருட காலமாக ஓர் அங்கிளிக்கன்சபைப் பாதிரியாராகச் சேவைசெய்துவந்தபின் திரு. ஈறிக் டாக்ளஸ் லேன் அவர்கள் தமது வாழ்க்கையின் ஆரம்பதொழிலை மேற்கொண்டு இப்போது ஆடவரான ஓர் நேர்ஸாகப் பணியாற்றிவருகின்றார். இவர் சென்றமாசிமாதமே லண்டன்நகரிலுள்ள அர்ச் ஆன் சேல்ம்-செசிலியா கோவிலிலே கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்பெற்றார். இவர் ஓர்இளைஞனக இருக்கும்போதே அங்கிளிககன்சபையில் ஓர்பாதிரியாராக வேண்டுமென ஆவல்கொண்டார். மூந்த ஓர் நேர்ஸாகவேலைசெய்தார். இந்த வேலை அங்கிளிக்கன்சபை வேத சாஸ்திரபடிப்பைத் தொடக்கி முடிப்பதற்கும், அவரது ஆவலைப் பூர்த்திசெய்வதற்கும் போதியபணத்தை மிச்சம்பிடிக்க வழிபண்ணியது. இப்போது அவருடைய ஆசை ஓர்கத்தோலிக்கருருவாக வரவேண்டுமென்பதே. அதற்காக ஓர்குருமடத்தில் சேரவேண்டுமென ஆசிக்கின்றார். அதனல் தமது வேத சாஸ்திரபடிப்புக்குப் போதிய பணத்தைக் [illegible]காகத் திரும்பவும் நேர்ஸ்வேலையில் அமர்ந்திருக்கின்றார். தற்போது இவர் லண்டன்நகரிலுள்ள அர்ச். இராயப்பர், அர்ச். பிலிப், அர்ச். பாவிலுவானவர் ஆஸ்பத்திரிக்குழுவுடன் அரசாங்கத்தில் பதிவுசெய்த ஓர் நேர்ஸாக வேலைசெய்துவருகின்றார். கத்தோலிக்க விசாரணைநிலையமொன்றுடன் தபால்மூலம் படித்த படிப்பே இவர் மனந்திரும்புதற்கான முதற்படியாகும்.

## பாப்பரசரும் முடப்பிள்ளைகளும்

அன்று ஞாயிற்றுக்கிழமை பாப்பரசர்அளித்த பகிரங்க பேட்டிஒன்றிலே, வெடிகுண்டொன்று வெடித்தகாரணமாகத் தனது கரத்தைஇழந்த பையன்ஒருவன் மட்பாத்திரம் ஒன்றை அவருக்கு அன்பளிப்புச்செய்தான். மட்கலம் வனையத் தான் பயிற்சிபெற்றுவரும் ஸ்தாபனம்ஒன்றில் அவனே இந்தப்பாத்திரத்தை வனைந்தான். ஏனையமுடப்பிள்ளைகள் பாப்பரசர்க்குரிய ஒருசோடி அங்கிகளை அன்பளிப்புச்செய்தார்கள். அர்ச். பேதுருவானவர்மகாலயத்தில் அருளப்பெற்ற இப்பேட்டியின்போது சமுகமளித்திருந்த 20,000 மக்களினிடையே 5,000 பிள்ளைகள் இருந்தார்கள். பாப்பரசர் முடப்பிள்ளைகள்மட்டில்—விசேஷமாய் யுத்தத்தாலே அங்கவீனர்களான பிள்ளைகள்மட்டில் விசேஷித்தகரிசனை எடுத்துவருகின்றார்.

"செஞ்சீனவில் மரியாயின்சேனை இரத்த ஞானஸ்நானம் பெற்றிருக்கிறது" என்றார் கருதினல் ஹூமசோனி பியொண்டி



ஷாங்காய் நகரத்தில். மரியாயின் சேனை ஞானத்தலைவரான
யோசெவ் செங் சுவாமி அவர்கள்
சேனைச் சேவையினிமித்தம் நாஸ்திகர் சிறையில் அடைபட்டு மரித்தார்.

## கம்யூனிஸ்த எதிர்ப்புநிலையம்

கம்யூனிஸத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்திலே கத்தோலிக்கருக்கும், முஸ்லீம்களுக்குமிடையே ஒத்துழைப்பை விருத்திசெய்யும் நோக்கமாக றோமைநகரிலே "கிழக்கு-மேற்குநிலையம்" ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. இதன்முதலாவதுகூட்டத்திற்கு அந்தியோக்நகரின் சீரியபத்திறியாக்குவான கருதினல் ரப்போனி ஆண்டவர் சமுகமளித்திருந்தார். கீழைத்தேச திருச்சபைத் திருச்சங்கத்தின் காரியதரிசியான கருதினல் திசறான் ஆண்டவர் அதன்நோக்கத்தை ஆதரிப்பதாகத்தெரிவித்து ஓர்திருமுகம் அனுப்பிவைத்தார்.

## மனந்திரும்பிய பாதிரியார்

படிங்ரன்எனுமிடத்திலே வூட்செஸ்றர்வீதியிலுள்ள லண்டன் நகரின் கீர்த்திவாய்ந்த அர்ச். மரியமதலேனளின் ஆங்கிலோ-கத்தோலிக்ககோவில் விசாரணைப்பாதிரியாராய் இருந்துவந்தவரான கனம். எச். தோண்ரன் ரிறாப் அவர்கள் மனந்திரும்பி, அங்கு பாம்வீதியிலுள்ள யேசுசபைக்கோவிலிலே வண. பேசில் பீற்ஸ்கிபன் சுவாமியாரால் நிகழும சித்திரைமாதம் 3-ந் திகதியன்று கத்தோலிக்கதிருச்சபையிலே சேர்க்கப்பெற்றிருக்கின்றார். இவர் விவாகஞ்செய்யாதவர். ஓர் கத்தோலிக்க குருவாகவேண்டுமென ஆசிக்கின்றார். யுத்தகாலத்திலே இவர் றோயல் ஆகாயப்படையின் விசாரணைப்பாதிரியாராய் இருந்தவர்.

## கருதினல் மின்ட்சென்ரிஆண்டவர்

சிறைவாசஞ்செய்யும் ஹங்கேரியதேச கருதினல்மின்ட்சென்ரி ஆண்டவர் சுயமாகச்செய்துள்ள ஓர்வேண்டுகோளின் பேரிலே, ஹங்கேரிய மேற்றிராணிமார்களின் மகாநாட்டுத் தலைவரான சிசாபிக் அதிமேற்றிராணியார் அவரைப்போய்ச் சந்தித்திருப்பதாகஅறிவிக்கப்பட்டிருக்கிறது. கருதினல்ஆண்டவர் ஹங்கேரியிற்றானே எங்கேயோ ஓர்இடத்திலுள்ள சந்நியாசமடமொன்றில் சிறைவைக்கப் பெற்றிருக்கின்றார். அவரது சரீர, மனேதத்துவங்கள மீளவும் பழமையாக முந்தியநிலைக்கு வந்துகொண்டிருப்பதாகவும், தேசத்தில்நடந்தேறும் சம்பவங்களின் போக்கை அவர் கருத்தாகக்கிரகித்துக்கொண்டுவரக் கூடியவரா யிருப்பதாகவும் சிசாபிக் அதிமேற்றிராணியார் கவனித்தாரென்றும் அறிவிக்கப்படுகிறது. ஹங்கேரியஅரசாங்கத்துடன் இந்த அதிமேற்றிராணியார் நிகழ்த்திவரும் பேச்சுகள் கருதினல் ஆண்டவரைச்சிறையிலிருந்து விடுதலையாக்குமென நம்பப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமாகம வாழ்த்துச் செய்திகள்

**சமாகமத்தின்போது பரிசுத்தபிதாவுக்கு அனுப்பியதும், அவரிடமிருந்து பெற்றுக்கொண்டதுமான தந்திச்சமாச்சாரங்கள்:**

மொன்சிஞ்ஞோர் டெல்ஆக்குவா
வத்திக்கான்நகரம்

மரியாயின் மடிப்பிதில் ஆயர்கள் ஆதரவில் செபத்திலும், ஞானச்சரீரத்தின் ஆராய்ச்சியிலும் ஒருங்கு கூடியிருக்கும் அகில இலங்கை மரியாயின் சேனை பரிசுத்தபிதாவுக்குத் சகலசந்தர்ப்பங்களிலும் மரணமட்டும் பிரமாணிக்கத்தைச் சமர்ப்பித்து, ஞான வெளிச்சத்தையும், திடனையும், ஒற்றுமையையும் அளிக்கும் தந்தையின் அப்போஸ்தலிக்க ஆசியை வேண்டுகிறது.

**தோமஸ் கூறே**
அதிமேற்றிராணியார்



தோமஸ்கூறே அதிமேற்றிராணியார்
கொழும்பு, இலங்கை.

மரியாயின் சேனைச் சமாகம தருணத்தில் பரிசுத்தபிதா தமக்கும், ஏனைய ஆயருக்கும், பிரமாணிக்கமுள்ள சேனையாளருக்கும் செய்துகொண்ட விண்ணப்பத்தின்படி தந்தைக்குரிய ஆசியை அருளுகிறர்.

**டெல் ஆக்குவா**
பதில்லிகிதர்

## கொழும்பு அதிமேற்றிராணியாரின் சுபசெய்தி

உத்தானத்தின் ஞாயிறு யேசுக்கிறீஸ்துநாதர் மரணத்தின்மேல் வெற்றி கொண்டதன் அடையாளமாயிருந்தாலும் அவர் அன்றுதானே தமது பிதாவண்டை எழுந்தருளிப்போகவில்லை. தமதுஉடலோடு மோட்சாரோகணத்தைத் தமதுசீடர்களுக்காகத் தாமதிக்கலாயினர். அப்போஸ்தலர்களின் நடபடியாகமம் கூறுவதுபோல: அந்த நாற்பதுநாட்களிலும் அவர் பரலோக பேரின்பத்தை விளக்குவதில் அதிகம் அக்கறைகொள்ளாமல் அப்பேரின்பத்தை அடைந்துகொள்வதற்காக நாம் இவ்வுலகில் எடுக்கவேண்டிய முயற்சிகளையிட்டு ஈடுபடவேண்டிய போராட்டங்களைப்பற்றி விளக்குவதில் 'பெருநாட்டம் கொண்டார். அப்போஸ்தலர்கள் இடப்போகும் அத்திவாரத்திலிருந்து எழவிருக்கும் உயிருள்ள திருச்சபையானது தம்மால்போதிக்கப்பட்ட பரமஇரகசியங்களை விசுவாசிகளின் மனதில் பதியச்செய்வதற்கும், அதன் மூலம் இறுதியில் மோட்சானந்த வெற்றியை அடைவதற்கும் எவ்வித ஆயத்தங்கள் செய்யவேண்டுமென்றுவிளக்குவதிலேயே கரிசனையாயிருந்தார்.

ஆகவே, மரியாயின்சேனையார் தங்கள் பாஸ்குகால விடுமுறைநாட்களை அர்ப்பணம்செய்தும், இந்தச்சமாகமத்தின்போது தங்கள் தெய்வீக எசமானின் திருவிருதயத்துடன் நெருங்கிய தொடர்புவைத்தும் தங்கள் செபத்தினுலும், வேதசத்தியங்களை ஆழமாக ஆராய்வதினுலும் தேவாசீர்வாதத்தைப் பெறக்கூடியவர்களாகின்றூர்கள். இவ்வண்ணம் செய்வதால், அவர்கள் அப்போஸ்தலிக்க பாரம்பரிய வழக்கத்தைக்கையாடுகிறூர்கள். ஆகவே, அவர்கள் மிகவும்பாராட்டக்கூடிய தேவ சேவையைச் செய்கிறூர்களெனக் கூறலாம்.

இவ்விடத்திலே நீங்கள்எல்லோரும் யேசுக்கிறீஸ்துநாதரது உத்தானஉடம்பின் அங்கத்தவர்களென்ற பரமஇரகசிய உண்மையை ஆராய்ந்து, அறிந்து உணர்வதற்கு ஒன்றுகூடியிருக்கின்றீர்கள். இத்தருணம் நீங்களும் சுவிசேஷத்தில் அபிஷேகம்பண்ணப்பட்ட குருமாரின் ஒத்துழைப்பாளர்களாக இங்குவந்து சேர்ந்திருக்கிறபடியால்உங்களைநாம் இல்லறதுறவிகளாகும் அப்போஸ்தலர்களென்றே அழைக்கவேண்டும்.

நீங்கள் தேடுவது கல்விமான்களின் கீர்த்தியையல்ல, சாலச்சிறந்த வேத அறிவின் சல்லாபங்களில் பங்குபற்றும் புகழ்ச்சியான உணர்ச்சியை அடைவதல்ல, மேம்பட்ட சொற்பொழிவுவிருந்துகள் அருந்துவதல்ல, ஆனுல், உங்கள் தெய்வீகஎசமானின் சித்தப்படி உங்களது தனிச்சீவியத்தை எவ்வளவுதூரம் அப்போஸ்தலிக்க சீவியமாக்கக்கூடுமோ என்றஇலட்சியத்தை அடைந்துகொள்வதற்கே இங்குவந்திருக்கிறீர்கள்.

உங்கள் இலட்சியத்தை அடைந்துகொள்வதற்கு அர்ச். பவுல் அப்போஸ்தலரைப்போலப் பரமஇரகசியங்களில் ஆழ்ந்தஅறிவும், வாசாலபேச்சுவன்மையும் வேண்டுமேயென்று நீங்கள் அங்கலாய்க்க வேண்டியதில்லை. அந்தஅப்போஸ்தலரைப்போல உங்கள்இருதயம், யேசுநாதருடைய இருதயமாக மாறினுல்போதும்.

அப்போஸ்தலர்களின் போதனைகள் மூலமும், அர்ச். அருளப்பர், அர்ச். சின்னப்பர் முதலியோரின் ஆகமங்கள் மூலமும், அவர்களைப் பின்தொடர்ந்த அவர்களுடைய உரிமைச்சந்ததியாராகும் உங்கள்குருமாரின் கற்பனைகள் மூலமும் நீங்கள்எல்லோரும் நித்திய சீவியமாயிருக்கும் நமதுதெய்வீகஎசமானின் பாதங்களில் சேருவீர்களென்பது எமது உறுதியான நம்பிக்கை.

இப்புராதன ஆரணியசேத்திரத்தில் நீங்கள் கூடியிருப்பது, அப்போஸ்தலர்கள் நமது அமலோற்பவநாயகியை நடுநாயகமாகக்கொண்டு கிறீஸ்துநாதரது உத்தானத்தின்பின் இராப் போசன மண்டபத்தில் கூடியிருந்ததை ஞாபகப்படுத்துகின்றது.

தேவதாயார் அப்போஸ்தலர்களுக்கு அருள்மாரிபொழிந்ததுபோல, அத்தாயாரின் இந்தத்திருத்தலத்தில் கூடியிருக்கிற உங்களுக்கும் அந்தநாயகி அருள்மாரி பொழிந்துகொண்டிருப்பாரென்பதில் சற்றேனும் சந்தேகமில்லை.

நாமும் நீங்கள் அங்கு நடத்தும் பிரார்த்தனைகளையும், தியானங்களையும் இருதயபூர்வமாக ஆசீர்வதிக்கின்றோம்.

**✠ தோமஸ் கூறே, O. M. I.,**
கொழும்பு அதிமேற்றிராணியார்

## யாழ்ப்பாண மேற்றிராணியாரின் சுபசெய்தி

இற்றைக்கு ஐந்துஆண்டுகளின்முன் தனதுவருங்கால திட்டத்தை வகுக்கும்படியாக மரியாயின்சேனை மடுமாதாவின் பாதத்தண்டையிலே கூடியது. சந்தேகமின்றியே நமதுஆண்டவள் எமக்கு வெற்றிக்குமேல் வெற்றியை ஈட்டித்தந்திருக்கிறுள்.

இன்று எமதுநாட்டின் சகலபாகங்களினின்றும் கூடியதொகையினராயும், அநுபவத்தில்கூடியவராயும் எமது இராக்கினியும், தாயுமானவளைப் புடைசூழ்ந்து நாம்கூடியிருக்கும் இந்தவேளை இசையாஸ் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் எமதுஉள்ளத்தில் ஓடிவருகின்றன. "உன் கண்களை ஏறெடுத்து உன்னைச் சுற்றிலும் பார்; இங்கு ஒன்றுசேர்ந்திருப்போர் எல்லோரும் உன்னிடத்தே வந்தவராவர்; இங்ஙனம் உனது புத்திரர் வெகுதூலையினின்று வருவர்; உன்புத்திரிகள் எப்பக்கத்தினின்றும் உன்னண்டையில் எழுந்திருப்பார்கள்." இதுதான் மரியாயின் யுகம். சர்ப்பத்தின்தலையை ஓர்காலம் நசுக்கியவள், அந்தகாரத்தின் வல்லபங்களைத் தோற்கடிப்பதற்காய்த் தமது எண்ணிக்கையில்லாத சேனைகளை எமதுகாலத்தில் எழுப்பியிருக்கிறுள். எமக்குள்ள போராட்டம் மாமிசத்தோடும், இரத்தத்தோடுமல்ல; ஆதிபத்தியங்களோடும், வல்லபங்களோடும், இந்த அந்தகாரலோகாதிபதிகளோடும், ஆகாசமண்டலங்களிலுள்ள அக்கிரம அரூபிகளோடும் நாம் போராடவேண்டியிருக்கிறது. ஆனுல், நாம் வெற்றிகொண்டவளின் உதவியைக் கொண்டு இவைகளையெல்லாம் வெற்றிகொள்வோம்.

மாதாவின் மட்டிலே எமக்குள்ள பக்திபற்றுதலைப் புதுப்பிக்கவும், வருங்கால வேலைத்திட்டத்தை ஒழுங்குபண்ணுவதற்காக அத்தாயின் உதவியைப் பெறவும், நாம் மற்றுமோர்தரம் இவண் கூடியிருக்கின்றோம். எமது திட்டம்தான் என்ன? எமது பரிசுத்த தாயார்பேரில் கொண்டுள்ள பக்தியே எமது வேலையின் பிரதானமான பாகம்என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், மரியாள் ஆண்டவருடைய ஞானச்சரீரத்தின் தாயன்றே! மேற்சொன்னதுபோன்ற அத்துணைபிரதானமான எமதுவேலையின் மற்றோர்பாகம் வாலிபரிடையேதான் உள்ளது. இன்றையவாலிபர் நாளையமனிதான்றே! அவர்களைச்சுற்றியுள்ள ஆபத்துக்களோ சமுத்திரம்போல் விரிவானவை. திருச்சபையின்பிற்காலம் இன்றையவாலிபரிலேயே தங்கியிருக்கின்றது. ஆகவே, எமதுசேனையாளருக்கு வாராந்தம் கொடுக்கப்படும் வேலையில் வாலிபரிடையே செய்யவேண்டிய வேலையே ஓர்பிரதான அம்சமாயிருக்க வேண்டுமென்பதை நாம்வலியுறுத்துகின்றோம்.

ஒருவகையில் மருதமடுத்திருப்பதிதான் எமதுவிசுவாசத்தின் நாற்றுமேடையாய் இருக்கின்றது. யேசுமயமான மரியாயின் மனப்போக்கு அதைநிரப்புகின்றது. இச்சுனையில் ஆழமாய் உட்கொண்டு யேசுவுக்கும், மரியாய்க்கும் புதுப்புதுவெற்றிகளை ஈட்டிக்கொடுக்க நாம் முன்வருவோமாக!

தேவன் உங்களெல்லோரையும் ஆசீர்வதிப்பாராக!

யேசுவிலும், மாசில்லா மரியாயிலும்
உங்கள் பிரமாணிக்கமுள்ள

**✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.,**
யாழ்ப்பாண மேற்றிராணியார்

## கண்டி மேற்றிராணியாரின் சுபசெய்தி

சேனையாளர் ஒவ்வொருவாரமும் ஒன்றுகூடிச் செபமாலை செபிக்கிறூர்கள். மரியாயின்கொடியின்கீழ் கிறீஸ்துநாதரின் இராச்சியத்தைப்பரப்ப அவர்கள் சல்லாபித்துத் திட்டமிடுகிறூர்கள். செபமும், பக்தியும்நிரம்பிய இந்தக்கூட்டங்களின்போது பக்திவைராக்கியம் நிறைந்த ஞானத்தலைவர்கள் உண்மையான சேனைமனப்பான்மையுடன் அந்த ஆச்சரியத்துக்குரிய ஆத்துமஇரட்சணிய புத்தகமாகிய மரியாயின்சேனைக் கைப்புத்தகத்தைத்தழுவி உபந்நியாசம் செய்கின்றனர். இந்தச்சுபசெய்திகளை எங்கள்நாயகிதாமே தமதுபிரதிநிதிகளாகிய ஞானத்தலைவர்களின் மூலமாய்க் கொடுக்கின்றுள்.

ஆகவே, சேனையாளர்களாகியநீங்கள் செய்யவேண்டியது எதுவென அறிந்திருக்கிறீர்கள். அன்றியும், நாம்உங்களிடம் எதிர்பார்த்திருப்பதற்கு மேலாகவும் நீங்கள்அநேகமாகக் கடமையாற்றி யிருக்கிறீர்கள்.



அதனுல், உங்களுக்கு நாம்முதலில் சோபனம்கூறுகிறேூம். அதன்பின் ஒருபுத்திமதியும் கூறுகிறேூம். உங்கள் ஞானத்தலைவர்களுக்குப் பிரமாணிக்கமும், அமைச்சலும் உள்ளவர்களாயிருங்கள். அவர்களுக்குச் செவிகொடுக்கும்போதும், பிரமாணிக்கமாயிருக்கும்போதும் எங்கள்நாயகிக்கே அவ்வாறு செய்கிறீர்கள். "அவர்களுக்குச் செவிசாய்க்கிறவன் அவளுக்கே செவிசாய்க்கிறுன்" என்று ஒவ்வொருசேனையாளர்களுக்கும் கூறுகிறேூம்.

அருமையான சேனையாளர்களே! நீங்கள் எங்கள் பரிசுத்ததேவதாயாரது கரங்களின் ஆயுதங்களாகவே, நரகசர்ப்பத்தின் தலையைநசுக்க நீங்கள்வலிமையாயும், வீரமாயும் போர்புரிந்திருக்கி

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரை மாதம்

**பொதுக்கருத்து:** குருத்துவ, சந்நியாச, கன்னிகா அந்தஸ்துகளுக்கான தேவ அழைத்தலையும், அதன் மகத்துவத்தையும் பற்றிக் குருமாரும், விசுவாசிகளும் சரிவர உணரும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** கோறியநாட்டிலே வேதபோதகர்களின் தொகை அதிகரிக்கும்படியாக மன்ருடிக்கொள்வது.


சத்தியவேத
**பாதுகாவலன்**

1956-ம் ஆண்டு
சித்திரைமாதம் 26-ந் திகதி

## மரியாயின் சேனைச் சமாகமம்

மருதமடுச் செபமாலைநாயகியின் திருசேத்திரத்திலே சரித்திரப்பெருமைவாய்ந்த எத்தனையோசம்பவங்கள் இதுகாலவரை பிரஸ்தாபமாக நிகழ்ந்திருக்கின்றன. ஆனல், அத்திருசேத்திரத்தில் நிகழும் சித்திரைத்திங்கள் 13-ந்திகதிமுதல் 16-ந்திகதி வரையிலே மாதாவின் மணிக்கொடியின்கீழ் எத்தகையபிரஸ்தாபமுமின்றியே மிகஅமைதியாகவும், பக்திப்பரவசமாகவும் நடந்தேறியவைபவமோ அதன் சரித்திரத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த தொன்ருகும். அஃதுதான் இன்றையஉலகில் நமது சத்திய திருமறைக்குச் சாதாரண கத்தோலிக்கர்மத்தியிலே ஓர்ஞானஅரணுகத் திகழும் — சாதாரணகத்தோலிக்கரின் அப்போஸ்தலத்துவ தொண்டாலே அதற்கோர் ஞானப்பலமாகத்திகழும் மரியாயின்சேனை நடாத்திய சமாகமமாகும். இச்சமாகமத்திற்குப்பரிசுத்தபாப்பரசரும், கொழும்பு அதிமேற்றிராணியாரும், இலங்கையின் ஏனையமேற்றிராணிமார்களும் அனுப்பியவாழ்த்துச் செய்திகளும், அதிமேற்றிராணியாரும், மற்றும் மேற்றிராணிமார்களும், இலங்கையின் பல்வேறு மேற்றிராசனங்களிலிருந்து குருமார் எண்பதின்மரும் சமுகமளித்திருந்ததும் இதன்காத்திரத்தை இனிதேஎடுத்துக்காட்டப் போதியதாகும். அன்றுகத்தோலிக்க அயர்லாந்திலே தெண்ணீர்க்கயத்துள் சிறுமீன்சினையினும் நுண்ணிதேயாக முளைத்தெழுந்த மரியாயின்சேனை இன்று பொதுவாகக் கத்தோலிக்கநாடுகளிலும், சிறப்பாக வேதபோதக நாடுகளிலும் ஆற்றிவருந்தொண்டுகளோஅளவிட்டுக்கூறுந்தரமன்று. அமைதியாய், அடக்கமாய், செபத்திலே, தபத்திலே, எல்லாவற்றிற்கும்மேலாகப் பரிசுத்ததேவதாயாரின் ஞானப்பலத்திலே முழுநம்பிக்கையாகத் தனதுமகத்தான ஆத்மீகதொண்டுகளை அரும்பிரயாசையுடன் ஆற்றிவருகின்ற மரியாயின்சேனையாளர் தங்கள்இரண்டாவது சமாகமத்தையும் இலங்கையிலே மாதாவின்பக்திக்கு ஓர்நடுநாயகம் போலத் திகழ்ந்துகொண்டிருக்கும் மருதமடுத்திருப்பதியில் நடாத்தியது பாராட்டத்தகுந்ததே. ஆம், வாரந்தோறும், மாதந்தோறும் அத்திருநாயகியின் ஆதரவையும், அனுக்கிரகத்தையும் இரந்து, திரள்திரளாக மக்கள் யாத்திரைசெய்துகொண்டிருக்கும் அத்திருப்பதியின் ஞானச்சூழ்நிலையிலே இந்தச்சமாகமம் எத்துணைவெற்றிகரமாய் நிகழ்ந்திருக்குமென்று எடுத்துக்கூறவேண்டியதில்லை, அல்லும் பகலுமாக எத்தனையோபலதியாகங்கள்மத்தியில் அருந்தொண்டுகள் ஆற்றிவருகின்ற மரியாயின்சேனையாளருக்குஜே! இந்தச்சமாகமத்திற் கலந்துகொண்ட அனைவர்க்கும் ஜே!!

*



முற்காலத்தில் கழுகை ஏந்திய துவசம் உரோமர் சேனைகளை வழிநடத்திச் சென்றது. அதுபோல இன்று புருவடிவமான இஸ்பிரீத்து சாந்துவினதும், வரப்பிரசாதங்களின் மத்தியஸ்தியாகிய மாசில்லாத மாதாவினதும் சாயல்களைத்தாங்கிய துவசம் மரியாயின் சேனையாளரை அப்போஸ்தலிக்க ஞானயுத்தத்தில் வழிநடத்திச் செல்லுகிறது.

*

● ஏறக்குறைய எந்த விதமான எண்ணெய்வகையிலும் — அதாவது திமிங்கலஎண்ணெய், நிலக்கடலை எண்ணெய், மற்றுந் தாவரஎண்ணெய்வகையிலும் ஓடக்கூடிய கார்ஒன்று அமெரிக்க டெற்ருேயிற்நகரிலே கட்டப்பெற்றுப் பரிசோதனைசம்பந்தமான பாவனையில் இருந்துவருகிறது. "எக்ஸ்பி—500" என அறியப்படுகின்ற இந்தக் காரை அமெரிக்க கார்உற்பத்தியாளர் ஒருவரே கண்டுபிடித்துக் கட்டியிருக்கிருர்.

# மரியாயின்சேனைச் சமாகமம்

இலங்கையின் சகலமேற்றிராசனங்களிலுமுள்ள மரியாயின்சேனைச்சமாகமம் இற்றைக்குஐந்துஆண்டுகளுக்கு முன் மருதமடுத்திருப்பதியில் சிறப்பாக நடந்தேறியது. அதைத்தொடர்ந்து இரண்டாவதுசமாகமம் இவ்வருடம் சித்திரைமாதம் 13-ந் திகதி முதல் 16-ந்திகதிவரை நடைபெறலாயிற்று. இந்தச்சமாகம வைபவத்திற்குக் கொழும்பு அதிமேற்றிராணியாரும், மூன்று மேற்றிராணிமார்களும், 80 குருமாரும், 3,000 பேருக்குமேற்பட்ட சேனையாளரும் சமுகங்கொடுத்திருந்தார்கள்.

கொழும்புமாநகரிலுள்ள செனத்துஸ்எனப்படும் மரியாயின்சேனைத் தலைமைப்பீடம் சமாகமத்திற்குச் சமுகமளித்த சேனையாளரின் பிரயாணம்--உணவு-தங்குவசதி ஆதியனசம்பந்தமாய்த் தகுந்தஏற்பாடுகளைச் செய்து, அதனைச்சிறப்பிக்கலாயிற்று.



**சேனை அப்போஸ்தலத்துவத்திற் சிறந்தவளும், தென்னுபிரிக்காவில் சேனையை வருவித்து, வளர்ச்சியடையச் செய்து, அப்போஸ்தல சீவியத்திலேயே உயிர் துறந்தவருமாகிய சகோ.**
**எடெல் குயின்**

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த மரியாயின்சேனை அங்கத்தவர்களாகிய எங்களிற்பலர் சித்திரை மாதம் 13-ந்திகதிகாலை 7 மணியளவில் "ஆவே மரியா" என்னுங் கீதத்தைப்பாடிக்கொண்டும், கொடிகளையேந்திக்கொண்டும், செபமாலைஓதிக்கொண்டும் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தை அடைந்தோம். சமாகமத்திற்கெனச் சித்தஞ்செய்யப்பட்டிருந்த விசேஷபுகையிரதப்பெட்டி ஒன்றில் மருதமடுவிற்குப் பிரயாணத்தை ஆரம்பிதோம். மத்தியானம் மதவாச்சியையடைந்து பகற்போசனத்தை முடித்ததும், கொழும்பு, காலி, கண்டி, சிலாப மரியாயின்சேனைச் சகோதரர்களும், மட்டக்களப்பிலுள்ள மரியாயின்சேனைச் சகோதரர்களும் புகையிரதமூலமாய் மதவாச்சியையடைந்தனர். அவர்களைக் கண்டதும் நாம்அடைந்த ஆனந்தத்திற்கோ ஓர்அளவேயில்லை. எல்லோரும்ஒன்றுகூடித் தத்தம் ஞானத்தலைவர்களின் தலைமையிலே இனிய கீதங்களைப் பாடிக்கொண்டு பிற்பகல் 4 மணியளவில் மடுறேட்டை அடைந்தோம். பிரயாணத்திற்குப் பொறுப்பாயிருந்தவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட பஸ் வண்டிகள்மூலம் மருதமடுத்திருப்பதியை அடைந்தோம்.

ஒவ்வொருகூட்டச் சேனையாளர்களும் தத்தமக்குக் கொடுக்கப்பட்ட இல்லங்களையடைந்து இளைப்பாறிய பின் எல்லோரும் மாலை 8 மணியளவில் கோவிலில் ஒன்றுகூடினேம். மணிஓசைகேட்டதும் சேனையாளரும், குருமாரும், மேற்றிராணிமாரும் கூடியசமுகத்தில் மகாவந். யாழ்ப்பாணமேற்றிராணியார் ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரவர்கள் சேனையின்அஸ்திவாரமாகிய சத்தியங்களையும், சேனையாளரின்உறவு பட்சம்ததும்பியதாய் இருக்கவேண்டுமென்பதையும் உருக்கமாக எடுத்துக்கூறி, மகாநாட்டை ஆரம்பித்துவைத்தார்.

"திருச்சபையின்சிரசாகிய கிறீஸ்துநாதர் அதன் உறுப்புகள் ஒவ்வொன்றையும் ஞானச்சரீரத்தின் தொழிலில், அததற்குள்ளவேலையைச் செய்ய அழைக்கிருர். ஆளுகிறவர்களும், அப்போஸ்தலரும், ஆயர்களும், பொதுவாக ஞானச்சரீரத்தைப்போஷித்துவளர்க்கும்பொறுப்பின் பெரும்பாரத்தைத் தாங்கிநிற்போருமேஞானச்சரீரத்தின்பிரதான உறுப்புகள்" என்றஉண்மையை இம்மகாநாட்டின் குறிக்கோளாகக் கொண்டுமேற்றிராணியார், குருமார், சேனையாளர்என்போரால் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும், தமிழிலும் அரியபல உபந்நியாசங்களும், புத்திபோதனைகளும் செய்யப்பட்டன. கலந்துரையாடல் சம்பந்தமாய் மேற்றிராணிமாரும், குருமாரும், சேனையாளரும் ஒன்றுகூடியிருந்து கேள்வி கேட்டதும், பதில்கூறியதும், சல்லாபித்ததும் சேனையாளரை மகிழ்ச்சியுறச்செய்தன.

தேவனின் ஆசீர்வாதம்நிறைந்தபதியாயும், தேவதாயின் அன்பும், அருளும்சுரக்குந்தலமாயும், யாத்திரிகர்களின் மத்தியதானமாயும் விளங்கும் மருதமடுப்பதியானது இம்மகாநாட்டிற்கு ஏற்றஇடமாய்த் தெரியப்பட்டதே இதனைமேலும்மேலும் சிறப்புறச்செய்துவிட்டது. கடைசிநாளன்று அதிமேற்றிராணியாண்டவரால் பெரியபாடற்பூசைநிறைவேற்றிப் பிரசங்கமுஞ் செய்யப்பட்டது. பூசையின்பின் செபமாலைத்தாயாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சுரூபசுற்றுப்பிரகாரம் பக்திப் பரவசமாக நடைபெற்றது.

ஈற்றில் இம்மகாநாட்டைக் குடும்பமாகவும், கூட்டமாகவும் கண்டுகளிக்கும் பேருதவியைச்செய்த அதிமேற்றிராணியார், மேற்றிராணிமாருக்கும், குருமாருக்கும், மரியாயின் சேனை அங்கத்தவர்களுக்கும் சேனுத்துஸ் தலைவரால் நன்றிதெரிவிக்கப்பட்டபின் சமாகமம் இனிதுமுடிவெய்தியது.

**தொடர்ந்துவரும் பாதுகாவலன் இதழ்களிலும் மரியாயின் சேனைச் சமாகம எதிரொலி சப்திக்கும்.**

## சமாகம ஆரம்பவுரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வோனின் சப்தம் தொனிக்கின்றது. "நீங்கள் தேவனைப்போலாவீர்கள்." பொய்யும், கவர்ச்சிகரமுமான வாக்குகள்மூலம் திருச்சபையின்மக்களை அழிவின்பாதையில் இழுத்துக்கொள்ளுகிறார்கள். எங்கள்இளைஞர் ஆபத்தின் வாசற்படியில் நிற்கிறார்கள். அவர்களுடைய மனப்பெருமையும், வீரத்துவமும் திருச்சபையின் சத்துராதிகளால் முற்றும் அவமாக்கப்படுகின்றது. இவ்வித அங்கலாய்ப்புக்குரிய தருணத்திலே நாம் என்செய்வோம்? மரியாயின்பாதுகாவலை நாடுவோம். அவளுடைய அடைக்கலத்தைத் தேடுவோம்—அதாவது, எங்கள்ஏக்கத்தை அவளுடைய அன்னைக்குரிய இருதயத்தில் மறைத்துக்கொள்ளுவோம். அமைதியுடன் நிலைபரத்தைச் சிந்தித்துப்பார்ப்போம். அவளுடைய ஆதரவுடன் நாம் செய்யவேண்டியது என்ன என்பதைத் தீர்மானிப்போம். நம்பிக்கையுடனும், மனத்திடாரிக்கத்துடனும் அணிவகுக்கப்பட்ட சேனையாக ஒருமித்து வெளியேறுவோம்.

மாசற்ற அன்னையைப்போலவே உங்கள் மேற்றிராணிமாரும் "நாம் இங்கே இருப்பது நல்லது" என்கிறார்கள். மகாமேன்மைதங்கிய அதிமேற்றிராணியார், கண்டி, காலி, திரிகோணமலை, சிலாபமேற்றிராணிமார் சகலர்போலும் இந்தவார்த்தைகளை நாம் உங்களுக்குச் சொல்லமுடியும். சகல சேனையாளரும் மரியாயின் மலர்ப்பாதத்தில் விசுவாசத்துடனும், செபம் நிறைந்த ஆராய்ச்சியுடனும் ஒன்றுகூடியிருப்பது உங்கள் ஆயர்களான எங்களுக்குக் கார்முகில்கள் அடர்ந்து நிற்கும் இத்தருணத்தில் மடத்திடனை அளிக்கும் மேலோக அடையாளமாகவே தோற்றுகிறது. ஆகவே, திருத்தாயாருடன் உங்கள் ஆயர்களாகிய நாமும் உங்களுடைய விசுவாசமும், பிரமாணிக்கமும்நிறைந்த இந்தநடவடிக்கைக்காக உங்களுக்கு நன்றி கூறுகிறோம். மூன்று நாட்களுக்காவது நீங்கள் எங்களோடு மரியாயின் இந்தத் தலைமைஸ்தலத்தில் உங்கள் கூடாரங்களை நிறுவியதையிட்டுச் சந்தோஷமடைகின்றோம். இங்கேயே உங்களை என்றும் வைத்திருக்க முயலமாட்டோம். ஆனால், திரும்பவும் முன்னணியிற்சென்று, முன்னிலும் அதிகமாகச் சகலதுறைகளிலும் பிளவுகளை நிரவும்படி ஏவுகிறோம். தற்கால அவசரநிலைபரத்திலும், சகலசந்தர்ப்பங்களிலும் அரியசேனையாளரே! உங்கள் ஆயர்கள் உங்கள் வீரத்துவம்நிறைந்த சேவையை எதிர்நோக்குகிறார்கள்.

# மடுப்பதியில் நடைபெற்ற மரியாயின் சமாகம முடிவு வைபவம்



முடிவு வைபவத்தில் தலைமை வகித்தார்

நீலவானிலே கோலமாமயில்களான வெண்முகில்கள் ஆனந்தநடனமாடக் காலைக்கதிரவன் குணதிசைக்குன்றிலே உதயமாகிறான். மடுப்பதியில் மரியாயின் கொடியின்கீழ் தொண்டாற்றும் ஆத்மீகபோர்வீரர் ஆரவாரித்தெழுகின்றனர். ஆலயமணிகளெல்லாம் ஆர்ப்பரிக்கின்றன. பகலவனின் ஆட்சியுடன் மாட்சியாய்க் காட்சிதரும் மடுப்பதியின் அழகைவர்ணிக்க எழுதுகோலா? அன்றேல் எழுத்துக்களா? இன்றேல் எண்ண அலைகளா? எவையுமிடந்தா ஒப்புக்கொள்ளா.

மூன்றுநாட்களாய் எவ்விதகஷ்டத்தையும் பொருட்படுத்தாது, இன்னலையெல்லாம் மின்னலாய்மறைத்து, தன் பத்திலெல்லாம் இன்பத்தை யூட்டிக் காத்தருளிய அன்னையின்கொடியின் கீழ் ஒரேமனப்பான்மையுடன் மக்கள் ஒன்றாய்த்திரண்டனர். திரிதினங்களாய்த் திவ்யமாதாவின் திருமடியில் தவழ்ந்து, அறுசுவையமுதத்தை மகிழ்வுடன்உண்டு, உவகையுடன்உரமுற்றுப் புத்துயிர்பெற்றனர். ஆம், போர்வீரருக்குரிய வீரதீரங்களுடன் கூடிய பலவகைப்பயிற்சிகளுமகொடுக்கப்பெற்று, ஸ்திரமூட்டப்பெற்ற மக்கள்குழாங்கள் பாலர்வாலர்வயோதிபர்என்றோ, ஆண் பெண்என்றோ பேதங்காட்டாது எங்கே எங்கேயெனவும், இதோஇதோ எனவும் மடுப்பதியின் முன்றிலிலுள்ள பசும்புற்றரை மைதானத்தில், சமுத்திர வெள்ளம்போலத் தத்தம்விருதுக் கொடிகளுடன் வந்துசேர்ந்தன.

ஏலவே தயாரிக்கப்பெற்றுள்ள சைனியநாம அட்டைகளையும், விருதுகளையும், கொடிகளையும் தாங்கியவண்ணமாய்ச் சேனுத்துஸ்தலைவர்கள், பல்வேறு இடங்களையுஞ்சேர்ந்த கியூறியா உத்தியோகஸ்தர்கள், சைனியத்தலைவர்கள், அங்கத்தினர்கள், மற்றும்பக்தர்குழாங்கள் அணிஅணியாய்ப் போருக்குப்புறப்படும் போர்வீரர்குழாம்போற் காட்சியளிக்க, மகாமேன்மைதங்கிய அதிமேற்றிராணியாண்டவர் அவர்களால் "நானே சீவியஅப்பம், இந்தஅப்பத்தைப் புசிப்பவன் என்றென்றைக்கும் பிழைப்பான்" என்ற திருவாக்கியத்தைப் பீடிகையாகக்கொண்டு சேனையாளரின் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பக் கூடியவகையில் அரியதோர் பிரசங்கம் செய்யப்பெற்றது.

இன்னும், திரிதினங்களாகத் திருப்பதியில் பெற்றதிடனால் சேனையாளர் உலகின் எண்திசைகளிலும், பதினாறு கோணங்களிலும் திடாரிக்கத்துடன் நுருவிச்சென்று ஒவ்வோர் ஆத்துமத்திற்கும் தொண்டாற்ற வேண்டுமென்றும் நினைவூட்டப்பெற்றனர். புத்துயிர் பெற்ற அங்கத்தினரின் உள்ளங்களிலெல்லாம் ஸ்திரமானதீர்மானம் வலியுறுத்தப்பட்டது. எங்கெங்கு வேலையுண்டோ, அங்கங்கெல்லாம் சென்று, உண்மையிலேயே உத்தமதொண்டாற்றி, விலைமதித்தற்கரிய இரத்தத்தைச்சிந்தி மீட்டுஇரட்சித்தும் இரட்சணியபலனை அடையப்பின்னிற்கும் எவ்வளவோமக்களை மரியாயின்தலைமையின்கீழ்நின்று போராடி ஒரேமேய்ப்பனில் ஒன்றித்துவாழும் ஒரேமந்தையாக்குவோமென்ற ஆர்வத்துடன் முன்னே திருச்சிலுவையையும், பின்னேதேவதாயாரும் காவலும் துணையுமாய்நிற்க, எல்லோரும் "ஆவே மாறிஸ் தெல்லா" என்ற கீதத்தைப்பாடிக் கொண்டு ஊர்வலமாகச்சென்று ஆலய முன்றிலை அடைந்தனர்.

பக்திப்பரவசத்துடனும், புதியதோர் தென்புடனும்வந்துகூடியமக்களை இன்னும் திடப்படுத்திவிடுமாறு தேர்மீது இவர்ந்துவந்த திருத்தாய்மரியின் திருச்சுரூபத்தினால் ஆசீர்வாதம் அருளஆயத்தமானது. குரவர்குழாம் தேர்மீதெழுந்தருளித் திருயாத்திரை செய்துவந்த அன்னையின் பிரதிமையைத் தாமும் எடுத்துக்கொள்ளவும், என்றும் ஞாபகசின்னமாய் வைத்துக்கொள்ளவும் உன்னிக் "காமிரா"வுங் கையுமாய்க் காட்சியளித்த இளைஞர்களின் தொகைதானென்ன!

காடிபுலிவாழுங் கானத்தூடே காட்சிதந்து, கருணைமழைபொழிந்து, பெற்றமாதாவைப்போல் பேருதவிபுரிந்த அன்னையின் பொன்னேர்பாதங்களை வணங்கிச் சாதியபேதமின்றியே சற்குணமனப்பான்மையுடன் திகழ்ந்த எல்லாமக்களும் ஒருங்குதிரண்டு:

"மாதாவேதுணை நீரேயும்மை,
வாழ்த்திப்போற்ற வரந்தாரும்;
ஈதோபிள்ளைகள் வந்தோமம்மா,
ஏற்றன்பாக எமைப்பாரும்"

என்றகீதத்தை உருக்கமாய்ச் சிங்களம், தமிழ்எனும் இருபாஷைகளிலும் வேற்றுப்பிரிப்பில்லாது பாடிநின்றனர். ஈற்றில் எல்லாச்சந்தோஷத்திற்கும் காரணமாகிய சர்வவல்லப சர்வேசுரனுக்கு நன்றிகூறுமுகமாய் அனைவரும்ஒன்றுசேர்ந்து ஒரேகுரலாய் "தெதேயும்" பாடிமுடித்தனர்.

இவைகளெல்லாம் முடிந்ததும் அருட்பிரசாதம்நிறைந்த அரியசமாகமம் இனிதேநிறைவாக, இரதங்களெல்லாம் புறப்பட்டுவாருங்களென்று ஆர்ப்பரித்தன. நன்றித்துதியுடனும், தனிப்பிரார்த்தனையுடனும் மக்கள்குழாம் மடுப்பதியை விட்டுப்பிரிய மனமின்றிப் பிரிந்தது.

அங்கே சமுகமளித்து அரும்பெரும் புத்திபோதனைகள்செய்தமகாமேன்மை தங்கிய அதிமேற்றிராணியாருக்கும், மேற்றிராணிமாருக்கும், குருமாருக்கும், சேனுத்துஸ் தலைவர்கட்கும், மற்றும் மரியாயின்அன்பர்கள், பக்தர்கள் அனைவருக்கும் அன்னை மரியின்ஆசி மழையெனப்பொழிந்து வேண்டும் பயனை அளிப்பதாக. சுபம்!

---

## கந்தளாய்-அல்லை நெல்விளைவு

கந்தளாய், அல்லைக் குடியேற்ற திட்டங்களின்கீழ் இம்முறை அமோகமாக விளைந்திருக்கும் நெல்லை வாங்குவதற்கென்று அரசாங்கம் 30 லட்சம்ரூபா செலவிடவிருக்கிறது. கடும்வரட்சிஏற்பட்டிருந்தபோதிலும் எதிர்பார்த்ததற்குமாறாக இருஇடங்களிலும் அதிகமானநெல் விளைந்திருக்கிறது. அதாவது கந்தளாயிலே ஒருலட்சம் புசல் நெல்லும், அல்லையிலே ஒன்றரைலட்சம் புசலும் விளைந்திருக்கிறது. இந்த நெல்லிலே குடியேற்றகாரருக்கு ஒருபகுதிநெல் ஒதுக்கப்படும். மீதியான நெல்லை அரசாங்கம் விலைகொடுத்து வாங்கும். அடுத்துவரும் சிறுபோகத்திலே குளங்களில்தண்ணீர் குறைவாயிருக்குங்காரணமாக இரு குடியேற்ற திட்டங்களின்கீழும் கந்தளாயிலும், அல்லையிலும் முறையே 4,000—6,000 ஏக்கரில்மாத்திரம் நெல்வேளாண்மை நடைபெறவிருக்கிறது.

## மன்னூர்ப் புதியதுளங்கள்

வரட்சியாலே பாதிக்கப்பட்டுள்ள கமக்காரருக்குக் கஷ்ட நிவாரணம் அளிக்கும்விஷயமாய் மன்னார்க்கச்சேரியிலே மன்னார்அரசாங்கதலைவர் திரு. டபிள்யு. பத்திராஜஅவர்கள் தலைமையில் காரியாதிகாரிகள், கிராமக்கமஅதிகாரிகளின் கூட்டம்ஒன்று சமீபத்தில் நடந்தேறியது. அதிலே ஆடுமாடுகளின் பாவனைக்கென்று ஆத்திமோட்டையிலும், புதுக்குளத்திலும், கோயில் குளத்திலும் 15,000 ரூபா செலவில் மூன்று புதியகுளங்களைக் கட்டவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இன்னும் நெற்செய்கைக்கென்று மாவில்லில் மற்றோர் புதியகுளத்தைக் கட்டுவதென்றும், சேனைப்பயிர்ச் செய்கைக்கென்று பெரியகுஞ்சுக் குளத்திலே 50 ஏக்கர் காட்டுநிலத்தைத் துப்புரவுசெய்வதென்றும் தீர்மானிக்கப் படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொழிலாளரின் பாதுகாவலராகிய

## அர்ச். சூசையப்பர் திருநாள்

கொழும்புத்துறைத் தாபனத்தின் பாதுகாவலராம் சஞ்சூசைமாமுனிவரின் அடைக்கலத்திருநாள் இம்முறை எமதுபரிசுத்தபிதா பன்னிரண்டாம்பத்திநாதபாப்பரசர் விதித்தபடி, தொழிலாளரின்பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பர் திருநாளாக அடுத்துநிகழும் வைகாசிமாசம் 6-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும். கொழும்புத்துறைப் பழையமாணவர்சங்க ஆதரவில்நடைபெறும். இத்திருநாளில் தாபனத்தின் பழைய மாணவரும், பழையமாணவர்சங்கத்துடன் இணைந்த சகலகத்தோலிக்க ஆசிரியர், ஆசிரியைகளும், மற்றும் பக்தர்களும் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகிறார்கள்.

5-5-56 — சனிக்கிழமை மாலை 7 மணிக்கு மாலைபாராதனை.

6-5-56 — ஞாயிறு காலை 6-30 பாடற்பூசை.

காலை 9-00 படிப்பித்தல் உபகரண பொருட்காட்சி.

காலை 9-30 பொதுக்கூட்டம்.

மாலை 4-30 மாலையாராதனை திருச்சுரூபசுற்றுப்பிரகாரம்.

தாபனத்தலைவர்
25-5-56. சுவாமியார்



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், தேவமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். எக்ஸ்பெடிட் இவர்களது மன்றாட்டாலும் எனக்குக்கிடைத்த சகலசகாயங்கட்கும் நன்றியறிந்ததோத்திரம் பண்ணுகிறேன். நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

கொழும்பு. B. F.

* * *

எங்கள் அன்பான சதாசகாய இராக்கினியின் மனருட்டினால் எங்கள்மகளுக்கு வந்தநோய் வழிவிலகி எங்களுக்கு மனச்சந்தோஷத்தை அளித்ததினால் அவவுக்கு நன்றித்துதி கூறுகிறோம். இன்னும் நாங்கள்கேட்ட மன்றாட்டுகளும் கிடைக்கும்படி தாயார் உதவிபுரிவாராக.

சில்லாலை. S. A.

* * *

நாங்கள்விரும்பிய ஒருவருக்கு ஓர்நல்ல விவாகம் சீக்கிரம்செய்துவைக்க எங்களுக்கு ஒத்தாசைசெய்யும்படி சதாசகாய மாதாவை இரந்துவேண்டுதல் பண்ணினோம். நாஙகள்கேட்டபடியே மாதா மலைபோல்குறுக்கிட்டு நின்ற விக்கினங்கள் யாவையும் பரிதிமுன்பனிபோல கொடிப்பொழுதில் அகற்றி, நாங்கள்விரும்பியவாறு எல்லாம்நன்மையாய் முடித்துத்தந்தமைக்காக எங்கள்அத்தியந்த பகிரங்க நன்றியைக் காண்பிக்கும்பொருட்டும், சதாசகாயமாதா பேரில் மற்றவர்களும் சிறந்தபக்தியும், நம்பிக்கையும் கொண்டொழுகும்பொருட்டும் நேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கின்றோம். இன்னும் இப்புதியகுடும்பத்துக்கு வேண்டியவரப்பிரசாதங்களையும் தந்துதவும்படியும் மாதாவை இரந்துவேண்டுகிறோம். சதாசகாய மாதாவின்புகழ் புவியெங்கும் புகழப்படுவதாக. M. T. L.

# மருதமடுச் சமாகமத்தில் ஆராய்ச்சிசெய்யப்பட்ட விஷயங்கள்

மரியாயின்சேனைச் சமாகமத்தின் போது நிகழ்த்தப்பட்டசொற்பொழிவுகளிலே அப்போஸ்தலத்துவ சேவைக்கும், சேனையின் சீவியத்துக்கும் முற்றும் ஆதாரமாயுள்ள இரண்டுவிஷயங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

**1. கிறிஸ்துநாதரின் ஞானச்சரீரம் அல்லது மீறை உடல்.**

**2. மரியாயின்சேனை தேவதாயார் மட்டில் அனுசரிக்கும் மெய்யானபக்தி.**

இந்தச்சொற்பொழிவுகள் ஆங்கிலம், சிங்களம், தமிழ்எனும் முப்பாஷைகளிலும் திறமைவாய்ந்த பல்வேறு பேச்சாளர்களால் நிகழ்த்தப்பட்டன. ஒவ்வோர் சொற்பொழிவின் முடிவிலும் சேனையாளர் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து, பலன்தரும்முறையில விவாதித்தார்கள். அவற்றிலே பங்குபற்றிய அங்கத்தவர்ஒருவர் விவாதித்தவிஷயங்களைப் பின்வருமாறு அடக்கிவரைகின்றார்.

### 1. கிறிஸ்துநாதரின் ஞானச்சரீரம்

**a. கிறிஸ்துநாதருடன் எமது ஐக்கியம்.**

(1) கிறிஸ்துவின் ஞானச்சரீரம், (அர்ச். சின்னப்பர்.)

(2) முந்திரிகையும், அதன் கிளைகளும் (அர்ச். அருளப்பர் சுவிசேஷம்.)




*

**வரப்பிரசாதங்களின் மத்தியஸ்தியாகிய மாசில்லாத மாதாவே மரியாயின் சேனையின் சீவியத்தினதும் சேவையினதும் நடுநிலையமாகிறாள்.**

*

"என்னுடைய உதவியில்லாமல் நீங்கள் எதையும் செய்யமுடியாது" 'நானேசீவன்.' 'நான்உங்களிலும்,நீங்கள்என்னிலும் சீவிக்கிறீர்கள்.' கிறீஸ்துவர்களை வருத்தப்போன பவுலைப்பார்த்துத்தேவன், "என்னை ஏன் வருத்துகிறாய்"?என்றுகேட்டார். இவ்வாக்கியங்களிலிருந்து கிறீஸ்துநாதருடன் நமக்குள்ளஐக்கியம் நன்கு விளங்குகின்றது. நீங்கள்கிறீஸ்துவின் ஞானச்சரீரத்தின் உறுப்புகள்என்று ஆதிக்கிறீஸ்தவர்களுக்குப் பவுல் அப்போஸ்தலர் படிப்பித்தார். கிறீஸ்துநாதர் ஞானச்சரீரத்தின் தலையாகவும், திருச்சபை அதன்உடலாகவும் அமைந்திருக்கும் அரிதான உண்மையைப் பவுல்அப்போஸ்தலர் நன்குஉணர்ந்து, இதைமக்களுக்கும் படிப்பித்துவந்தார். உடல்தலையுடன் இணைக்கப்பட்டிருப்பது, உயிருடன் வாழ்வதற்கு இன்றியமையாதது. எமது அப்போஸ்தலத்துவ சீவியத்தில் கிறீஸ்துநாதரே எம்மில்சீவிக்கிறார்.

**b. கிறீஸ்துநாதரில் நம்ஒவ்வொருவரினதும் ஐக்கியம்:**

கிறீஸ்துவின் ஞானச்சரீரத்தில் கிறீஸ்தவர்களாகிய நாம்ஒவ்வொருவரும் உறுப்புகள். உடலுக்கு எல்லா உறுப்புகளும் அவசியம். ஒவ்வொரு உறுப்பும் தனக்குஇயல்பாயுள்ள வேலையைச் செய்யவேண்டும். எல்லாஉறுப்பும்ஒரேமாதிரியானவேலைகளைச்செய்வதில்லை. உறுப்புகள்எல்லாம் கண்களாகவும், கைகளாகவும் இருக்கவிரும்பினால் அவசியமான மற்றவேலைகளைச் செய்யும் உறுப்புகளுக்கு என்செய்வது? ஆதலால், நாம்ஒவ்வொருவரும நமது ஆற்றலுக்கேற்றவாறு வெவ்வேறு உறுப்புகளாய் அமையவேண்டும். இதில் பெரிதுசிறிது பார்ப்பதற்கிடமில்லை. நமதுவாயிலுள்ள பற்கள் நாவைக்கடித்துவிட்டால் நாம்உடனே பற்களைப்பிடுங்கி எறிவதில்லை. அத்துன்பத்தைச் சகித்துக்கொள்ளுகிறோம். அதுபோல, ஞானச்சரீரத்தின் உறுப்புகளாகியநாம் ஒருவர் ஒருவருக்குச் செய்யும்குற்றங்களை மன்னிக்கவேண்டும். காலில் ஒருவருத்தமுண்டானால் முழுஉடம்பும் வருந்தும். அவ்வருத்தத்தைப் பரிகரிக்க மற்றஉறுப்புகள் எல்லாம்சேர்ந்து உதவிசெய்யும். அதுபோல ஞானச்சரீரத்தின் ஒருஉறுப்புக்கு ஏற்பட்ட துன்பத்திற்கு நாம் வருந்தி உதவவேண்டும். எல்லாஅங்கங்களும் சுகமாயிருந்தால் உடம்பு முழுவதும் சுகமாயிருக்கும். ஆதலால், உறுப்புகளாகியநாம் அழுவாரோடு அழுது, மகிழ்வாரோடுமகிழ்ந்து அந்நியோன்னியமாக வாழவேண்டும். "உன் பகைவர்களை நேசி," "உங்களுக்குத் தீமைசெய்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்" என்னும் கிறீஸ்துநாதரின் போதனைப்படிசீவிக்க முன்சொல்லப்பட்டவை வழிகாட்டும். ஆகவே, அப்போஸ்தலத்துவ சேவையும் கிறீஸ்துவனின் இன்றியமையாக்கடமை.

**c. கிறீஸ்துவின் ஞானச்சரீரத்தினதும், அதன் ஒவ்வொரு பாகத்தினதும் பிறப்பு,வளர்ச்சி, பெலன்:**

"இஸ்பிரீத்துசாந்துவினாலே அர்ச். கன்னிமரியாளிடமிருந்து." இஸ்பிரீத்துசாந்துவானவர் எம்முள் மறைந்த தேவனாக இருக்கிறார். ஏனெனில், அவர் கிறீஸ்துவினது ஞானச்சரீரத்தின் பிறப்பிற்கும், வளர்ச்சிக்கும், பெலத்திற்கும் அதிகாரணர்என்பதை நாம்உணரவில்லை. இப்பிறப்பிற்கும், வளர்ச்சிக்கும், பெலத்திற்கும் இஸ்பிரீத்துசாந்துவினதும், கன்னிமரியாயினதும் ஐக்கியம் இன்றியமையாதது. கிறீஸ்துநாதர் கன்னிமரியாயின் உதரத்தில் இஸ்பிரீத்துசாந்துவின் வல்லபமிக்கஅருளினால் பிறந்துவளர்ந்தார். அதுபோலவே, கிறீஸ்துநாதரின் ஞானச்சரீரமும் பிறந்துவளர்ந்து வருகிறது. யேசுநாதரின் உத்தானத்தின் பின்பு பயத்தினால் அப்போஸ்தலர் ள் கன்னிமரியாயுடன் ஓர் அறையினுள்ளே பூட்டிக்கொண்டிருந்தபோது இஸ்பிரீத்துசாந்து அக்கினிநாக்குருபமாக அவர்கள்மேலிறங்கி அவர்களைப் பலப்படுத்தினார். கிறீஸ்துநாதாது ஞானச்சரீரத்தின் அங்கங்களாகிய எம்மைப் பலப்படுத்தத் தேவதிரவிய அனுமானங்களை யேசுநாதர் உண்டுபண்ணினார். தேவதிரவிய அனுமானங்கள் ஒவ்வொன்றிலும் இஸ்பிரீத்துசாந்துவினதும், கன்னிமரியாயினதும் ஐக்கியமுண்டு. கன்னிமரியாய் சகலவரப்பிரசாதங்களுக்கும் மத்தியஸ்தி. தேவதிரவிய அனுமானங்கள் ஒவ்வொன்றிலும் இஸ்பிரீத்துசாந்துவின் அர்ச்சிப்பு வேலையுண்டு. தேவதிரவிய அனுமானங்கள் இஷ்டபபிரசாதத்தின்ஊறணிகள். எல்லா இஷ்டப்பிரசாதங்களும் தேவமாதாஎன்னும் வாய்க்கால்வழியாகவே எமக்குக்கிடைக்கின்றன. எனவே, ஒவ்வொரு தேவதிரவிய அனுமானத்திலும் இஸ்பிரீத்துசாந்துவினதும், கன்னிமரியாயினதும் ஐக்கியமுண்டு. அப்போஸ்தொலிக்க சேவைசெய்பவன் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் மட்டிலும், தேவதாயார்மட்டிலும் விசேஷபக்தி உள்ளவனாகவேண்டும்.

**d. கிறீஸ்துவின் ஞானச்சரீரமும், தேவதிரவிய அனுமானங்களும்.**

ஞானஸ்நானம் எம்மைக் கிறீஸ்துவின் ஞானச்சரீரத்தில் பிறப்பித்துஅதனுடன் இணைக்கிறது. உறுதிப்பூசுதல் கிறீஸ்துவசீவியத்தில் பெலப்படுத்துகின்றது. பச்சாத்தாபம் பாவத்தாலிழந்த ஞானஉயிரைத் திரும்பக் கொடுக்கின்றது. திவ்வியநற்கருணை ஞானஉயிரைப் போஷித்து வளர்க்கிறது. நாம் உண்ணும்உணவு இரத்தத்தோடு இரத்தமாகவும், தசையோடு தசையாகவும் சேருகிறது. ஆனால், திவ்வியநன்மை எம்மைமுழுவதும் கிறீஸ்துமயமாக்குகின்றது. அசுத்தமான தொன்றும் தேவசந்நிதானத்தில் பிரவேசிக்கமுடியாதென்றமையால் பாவங்களைக் கட்டிக்கொள்ள உடந்தையாக இருந்த பஞ்சேந்திரியங்களைப் பரிசுத்ததைலத்தாற்பூசி அவஸ்தைப்பூசுதல் சுத்தப்படுத்துகின்றது. ஞானச்சரீரத்தின் வளர்ச்சியை விருத்திசெய்யும் வேலையாட்களைக் குருத்துவம்உருவாக்குகின்றது. ஞானச்சரீர உறுப்பினரை மெய்விவாகம் அதிகரிப்பிக்கின்றது. அப்போஸ்தொலிக்க சீவியத்திற்குத் தேவதிரவியஅனுமானங்கள் இன்றியமையாத கருவிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.

# அர்ச். லூயிஸ் மரியமோன்பொர்த்தின் பக்தி

## மரியாயின் சேனையின் விசேட பக்தி

பரிசுத்தகன்னிமரியாயில் அர்ச். லூயிஸ் மரிய கிறிஞ்ஞோன் டி மொன் பொர்த் கொண்டிருந்தபக்தியை நாம் பின்பற்றுவதற்கான சிலமுறைகள் :

### அர்ச். டி மோன்போர்த் கையாண்ட பக்திமுறை எது ?

மரியாயின்வழியாகத் தன்னை முழுவதும் யேசுவுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்பதே அவர்கையாண்ட பக்திமுறையாகும். இப்பக்தியில் இரண்டுபிரதான அம்சங்கள் அமைந்துள்ளன. முதலாவது: தேவதாயாருக்குத் தன்னைமுழுவதும் காணிக்கையாக ஒப்புக்கொடுத்து அடிக்கடி இவ் வார்த்தைப்பாட்டைப் புதுப்பிப்பது. இரண்டாவது: தேவகுமாரன் நசரேத்தூரிலே மரியாயின்கண்காணிப்பில் வளர்ந்ததைப்பின்பற்றி நாமும் அவவுடையபராமரிப்பிற் ஜீவிப்பது.

### அடிக்கடி சொல்லவேண்டிய மனவல்லயச்செபம் :

என் இராக்கினியே! என்தாயாரே! நான்முழுவதுமஉமக்கே சொந்தம். என்னிடத்தில் உள்ளதுசகலமும் உமக்கேசொந்தம்.

### காலையிலும் மாலையிலும் :

பக்திவைராக்கியத்துடன் பின்வரும் காணிக்கைச்செபத்தைச் சொல்வது: அன்பானதாயே! என்னிடத்தில் உள்ளசகலமும் உமக்குச்சொந்தம். உம்மிடத்தில் உள்ள சகலமும் எனக்குச்சொந்தம்.

### சகல கிருத்தியங்களிலும் :

நாம் எந்தவேலையைச் செய்தாலும் மரியாய் அந்தவேலையைச்செய்வதாயிருந்தால் எந்தமுறையிற் செய்திருப்பாளெனச்சிந்தித்து, அந்தமுறையை நாமும்அநுசரிக்கப் பழகவேண்டும். "அன்பானதாயே! என்மூலம் நீரே ஜீவித்தருளும். என்னிடமாக நீரே செபியும். என்துன்பங்களிற் பங்குபற்றும். எனக்குப்பதிலாகப் பேசும். எனதுவேலைகளை உம்முடையனவாக்கும்." இவ்விதம மரியாயுடன் ஒன்றித்துப் பிரமாணிக்கத்துடனும், பொறுமையுடனும நமது அந்தஸ்தின் கடமைகளையெல்லாம் நிறைவேற்றிவரவேண்டும்.

### தியானம் :

அன்பானதாயே! யேசுவிடமிருந்து என்னைப் பிரிக்கக்கூடிய எண்ணங்களை அகற்றிவிடும. யேசுவின்கொள்கைகளுக்கு முரணானவற்றை நான்மேற்கொள்ளாது என்னைத் தற்காத்துக் கொள்ளும். என்னுடையவிருப்பத்தை யேசுவின்சித்தத்துடன் ஒன்றிக்கப்பண்ணும். "என்ஆத்துமமானது என் ஆண்டவரை மகிமைப்படுத்துகிறது" என நான்சொல்லி அதற்கிசையநடக்க எனக்குவழிகாட்டும் எனக்குஅவசியமான இஷ்டப்பிரசாதங்களைத் தந்து நான் யேசுவைப்பின்பற்றிநடக்க என்னைத்தூண்டிவிடும்.

### தியானத்தின் விளைவுகள் :

மரியாயின்மூலம் தேவனுடன் ஒன்றித்துச்சீவித்தல்: வரப்பிரசாத ஏவுதல்களுக்குப் பிரமாணிக்கம். தேவசித்தத்திற்குப் பணிந்து மரியாயுடன் ஒன்றித்த "இதோ! உம்முடைய அடிமையானவள்" என்றுசொல்லக் கூடிய தகுதியுள்ளசீவியம்.

### வாராந்த பாவசங்கீர்த்தனம் :

மரியாயுடன் ஒன்றித்துச் சிலுவையடியிற் சாஷ்டாங்கமாய்விழுந்து, "அன்பானதாயே! உமது பரிசுத்த கன்னிமையானது பாவத்தை வெறுத்துத் தள்ளியதுபோலவும், உமதுபூரணமான பிரமாணிக்கம் அசுசியானவைகளை எரித்துச் சாம்பராக்கியதுபோலவும் என்ஆத்துமத்திலுள்ள பாவங்களெல்லாவற்றையும் நான்வெறுத்துத் தள்ள எனக்குப் பெலனைத்தாரும்" என்றுசெபிக்கவும்.

### திவ்வியபூசைப்பலிநேரம் :

"அன்பானதாயே! கல்வாரிமலைக்கு என்னையும் உம்முடன் கூட்டிச்செல்லும். என்னையேசுவுக்கு அன்பின் பலியாக ஒப்புக்கொடும். நீர் யேசுவுடன் உடன்இரட்சகியாகப் பரமபிதாவுக்குப் பலிஒப்புக்கொடுத்தது போல உம்முடனும், யேசுவுடனும் நானும்கூடிப் பலிஒப்புக்கொடுக்க எனக்குப்படிப்பித்தருளும். மரியாயே! நீர் சகலவரப்பிரசாதங்களினதும் மத்தியஸ்தியாக இருப்பதினால் இந்த விலைமதிக்கப்படாத திருப்பலியின் பேறுபலன்களை என்மேலும், சகல மனிதர்மேலும் மழைமாரியாகப் பொழிந்தருளும்"

### திவ்வியநற்கருணை :

அன்பானதாயே! யேசுவை நான் தகுதியுடன்பெற்றுக்கொள்ள என்னை ஆயத்தப்படுத்தும் உமது இருதயத்தை எனக்கு இரவல்கொடுத்து என்னிடமாக அவரைவரவேற்று, ஆராதித்து, வணங்கி எனக்குத்தேவையான வரப்பிரசாதங்கள் எல்லாவற்றையும் பெற்றுத்தாரும். என்னிலே அவர்சீவித்து என்னைஆட்கொள்ள அவரிடம்மனுப்பேசும். ஓ! மதுரமானதாயே! எல்லா இருதயங்களிலும் அவரது அன்பின் ஆட்சியை நிறுவியருளும்.

### தேவநற்கருணைச் சந்திப்பு :

பெத்தலகேமஊரில் முதன்முதலாகப் பாலகயேசுவை மரியாய்பெற்று ஆராதித்து வணங்கியதுபோல அவவுடன்ஒருமித்து நற்கருணைநாதரை ஆராதித்தல்.

### எல்லாவேளைகளிலும் :

தேவதாய் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறா என்றஎண்ணம் எமது மனதில் உண்டாகவேண்டும். நாம் யேசுவுடன் ஒருமித்திருப்பதைத் தேவதாயார் மிகவும்விரும்புவா ஆதலால், தேவனுக்குப்பிரியமான எல்லாவற்றையும் மரியாயுடன் ஒருமித்துச்செய்யவேண்டும்.

### உதாரகுணம் :

பிரமாணிக்கமுள்ள வேலையாட்களைப்போலும், அமைச்சலுள்ள பிள்ளைகளைப்போலும் கடுகடுப்பு, முறுமுறுப்பு இல்லாது பணிவுடனும், அன்புடனும் எங்களுடையகடமைகளை நிறைவேற்றவேண்டும். எமக்குவரும் இன்பதுன்பங்களெல்லாம் மரியாயின் கரங்களிலிருந்து வருகின்றனவென்று எண்ணி ஏற்றுக்கொள்ளவேண்டும். நாம் தேவனுக்குஒப்புக்கொடுக்கும் எல்லாவற்றையும் மரியாயின்கன்னிமை பொருந்திய கரங்களால் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

### நன்றிஸ்தோத்திரம் :

மரியாயின் ஆதிக்கத்தில் ஒப்படைக்கப்பட்ட எல்லா வரப்பிரசாதங்களுக்காகவும் பரிசுத்த பரமதிரித்துவத்திற்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம்சொல்லுவோம். மரியாளைப் பரமபிதா தமது குமாரத்தியாகவும், தேவசுதன் தமது மாதாவாகவும், திவ்விய இஸ்பிரீத்து சாந்து பிரியபத்தினியாகவும் மகிமைப்படுத்தியதற்காகத் தேவனுக்குச் சதாகாலமும் ஸ்தோத்திரமும், ஸ்துதியும் உண்டாவதாகவென்று புகழ்ந்துபாடுவோம்.

இவ்விதம் சீவித்தால் நித்தியவாழ்வை அடைவோம்.

# சமாகம வாழ்த்துச் செய்திகள்

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

றீர்கள. சாத்தான் கர்ச்சித்துத்திரியும் சிங்கத்தைப்போல ஆத்துமங்களை விழுங்கததிரிகிறான். அவன் வலிமையுடையவன். ஆனால், மரியாய்க்கு அவனிலும்பார்க்க அதிகவலிமை யுண்டு. தேவனுக்குப்பின் மரியாயைப்போல யாருக்கு வல்லபமுண்டு? அவளே சூரியனைப்போல இலங்குகிறவளாய், படையணியைப் போலப் பயங்கரமுறுத்துகிறவளாய் இருக்கின்றாள்.

இந்தஅருமைத் தாயாருக்கு — சேனையின் இராக்கினிக்கு உண்மையாயும், பிரமாணிக்கமாயும் ஒழுகுவீர்களாக. அவள் சத்தியமாகவே இராக்கினியாயிருக்கிறாள். அவள் ஒருஇராக்கினிக்குரிய **உந்நதம்** கொண்டிருக்கிறாள். ஏனெனில், அவள் எங்கள் இராயனின் தாயாயிருக்கிறாள். அவள் ஒருஇராக்கினிக்குரிய **உரிமைகள்** பூண்டிருக்கிறாள். ஏனெனில், அவள் தமதுகுமாரனுடைய இரட்சணியவேலையில் ஒத்துழைத்ததாயாகவே இந்தஉரிமைகளுக்குப் பங்காளியாயிருக்கிறாள். அவள் ஒருஇராக்கினிக்குரிய **வல்லபம்** கொண்டிருக்கிறாள். ஏனெனில், அவள் சகலவரப்பிரசாதங்களுக்கும் மத்தியஸ்தியாயிருக்கிறாள்.

மரியாய் இராக்கினியாயிருக்கிறாள். ஆனால், அவளுடைய தெய்வீககுமாரனுடையதுபோல் இந்த உலகத்தைச் சார்ந்ததல்ல. அவளுடைய இராச்சியம் மனிதஆத்துமாக்களில் உண்டு.

ஆகவே, அருமையான சேனையாளர்களே! உங்கள் கைப்புத்தகம் கூறுகிறபடி, உங்களை அர்ச்சிப்பதும், மற்றவர்களை அர்ச்சிப்பதுவுமே உங்கள்முக்கியமான நோக்கம்என்க. அப்போதுதான் எங்கள்நாயகி உங்கள் இருதயங்களுக்கு இராக்கினியாயிருப்பாள்.

அதனால் உங்கள் முழுச்சீவியத்தையும் மரியாய்க்கு அர்ப்பணம் செய்யுங்கள். அர்ச். லூயிஸ் மரிய டி மொன்போர்த்என்பவரின்மனப்பான்மைப்படி உங்களை முழுவதும், உங்களுக்குள்ள யாவற்றையும் தத்தப்பண்ணி **மரியாளினாலும், மரியாளுடனும், மரியாளிலும்,மரியாளுக்காகவும்** சுபாவத்துக்குமேலான சீவியத்தை நடாத்திவருவீர்களாக.

நாம் உங்களை ஆசீர்வதிக்கிறோம்.

யேசுநாதரிலும், மரியாயிலும்
உங்கள் பற்றுள்ள

✠ டீ பேணுட் றேக்ஞோ, O.S.B.,
கண்டி மேற்றிராணியார்

## காலி மேற்றிராணியாரின் சுபசெய்தி

மருதமடுத்திருப்பதியிலே இவ்வருடம் சித்திரைமாதத்தில் அகில-இலங்கை மரியாயின்சேனைச் சமாகமத்தை இலங்கைச் செனத்துஸ் நடத்துகிறதென்பதைஅறிந்து நாம் மனமடங்கா மகிழ்ச்சியடையலானோம். அந்தச் சமாகமத்தின்போது சமுகமளிக்கமுடியாதிருப்பது எமக்கு மிகுந்தவிசனத்தைத் தருகின்றதெனினும், உங்கள் பத்திவேகம்நிறைந்த செபவேண்டுதல்களுடன் எமதுஆத்துமமும் ஒன்றித்து நிற்கிறது. ஆவியானவர் தமக்குஇஷ்டமுள்ளஇடத்தில் சுவாசம்கொடுக்கிறார். தாழ்மையுடனும், படைக்கப்பட்டவஸ்துகளின்பற்றில்லாமையுடனும், அமைதியான இருதயசமாதானத்துடனும் திவ்விய ஆவியானவரைப் பெறும்படி எமது அரியஅன்னையாரின் பாதத்தண்டை காத்திருக்கும சேனையாளர் அவரது குரற்தொனியைக் கேட்பார்களென்பது நிச்சயம்.

சேனையின்வேலை பரிசுத்தஆவியானவருடைய வேலையாதலால் சேனையாளர் தங்கள்மனதையும், இருதயத்தையும் செபத்திலும், தியானத்திலும் ஒன்றித்திருக்கச் செய்யும்போதே தங்கள் வேலையின் இலக்கையும், அதனை அடைய வேண்டியசக்தியையும் பெற்றுக்கொள்வார்கள்.

பாஸ்குத்திருநாளின்பின் இந்தச் சமாகமம கூடுவது மிகவும் பொருத்தமானது. எம் பரலோகஅன்னையின் அன்பிலும், அடைக்கலத்திலும் நம்பிக்கை வைத்தும், "நம்பிக்கை கொள்ளுங்கள், நாம் உலகத்தை வெற்றிகொண்டோம்" என்றுவசனித்து மரணத்தை அண்டிப் போனவராகிய உயிர்த்த எமதுஆண்டவரில் நம்பிக்கை வைத்தும்— இந்தச் சமாகமம் முடிந்து மடுப்பதியை விட்டுநீங்கும் சேனையாளரின் மனப்பான்மையாய் இருக்கும்என்பதே எமதுநம்பிக்கை.

அமலோற்பவ இருதய நாயகியில் உங்கள்எல்லோருக்கும் அதிஅன்பான பிதாவுக்குரிய ஆசீர்வாதத்தை அருளுகின்றோம்.

✠ என். எம். லெளதாதியோ, S.J.,
காலி மேற்றிராணியார்

## திரிகோணமலே மேற்றிராணியாரின் சுபசெய்தி

எமது ஆண்டவளின் மலர்ப்பாதத் தண்டை நீங்கள் குழுமியிருக்கும் இச் சந்தர்ப்பத்திலே நாம உங்களுக்கு ஓர் விசேஷசோபனங்கூறுவதுமன்றி உங்களுக்காகப் பத்தியாய் மன்றாடியுங் கொள்ளுகிறோம். மரியாயின் தெய்வீகபுத்திரனுடைய இராச்சியத்தை அர்ச்சித்துப் பரப்புவதற்கு இலங்கையிலுள்ள மரியாயின சேனையானது பரிசுத்தமும், தேசாபிமானமும்,வல்லபமுமுள்ள ஓர் எத்தனமாய் இருக்க வேணுமென்பதே எமது வேண்டுகோளாகும். சீனாவிலுள்ள சேனையாளரின் வீரத்துவசெயலகள் உங்களுக்கு முன்மாதிரிகையாய் இருக்கின்றன. தமது இருதயத்துக்கு உவப்பான சேனையாளராய் நீங்கள்ஆகும்படி மடுப்பதியின் பரமஆண்டவள் உங்களுக்கு அருள்பாலித்து உங்களை ஆசீர்வதிப்பாளாக!

எமது ஆண்டவரிலும், எமது ஆண்டவளிலும் உங்கள் பிரமாணிக்கமுள்ள

✠ இக்னேஷஸ் கிளென்னி, S. J.,
திரிகோணமலே மேற்றிராணியார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

## கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை

அநேகநாடுகளிலே பட்டினியால் வாடுகின்ற லட்சக்கணக்கானமக்களின் பசியைப்போக்கிக் கஷ்ட நிவாரணம் அளிப்பதற்கென்று ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் ஐந்துலட்சம்தொன் தானியத்தை இலவசமாக உதவ முன்வந்தது. ஆனால், அதனை அந்தந்தநாடுகளுக்கு ஏற்றியிறக்கும் கப்பற்செலவை இறுக்கப்போதிய பணமின்மையால் அதில் மூன்றுலட்சம்தொன் தானியமும் அமெரிக்க பண்டகசாலைகளில் கைவிடப்பட்டிருக்கிறது. இந்தத் தானியத்தைக் கப்பற்செலவுபொறுத்து அனுப்பிவைக்க ஐக்கிய அமெரிக்க தேச பிறநாட்டுஉதவி நிர்வாகசபையிடம் போதியநிதியில்லாதகாரணமாக, ஐந்துலட்சம்தொன் தானியத்திலும் இரண்டுலட்சம்தொன்னே அனுப்பிவைக்கப்படுமென்று தானியம்உதவ வாக்குப்பண்ணப்பட்ட கத்தோலிக்க, புறொட்டஸ்தாந்த, யூத பிரதிநிதிகள் கோஷ்டிகளின் தலைவர்களுக்கெல்லாம் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## முசோலினியின் சிலையிடமாக

இத்தாலியிலே சிஞ்ஞோர் முசோலினி சர்வாதிகாரியாயிருந்து பிரஸ்தாபத்தின் உச்சநிலையைப் பெற்றிருந்த காலத்திலே ரோமைநகருக்குச் சமீபமாகப் பிரமாண்டமான பாசிஸ்தயுவர்களின்நிலையம்ஒன்றைக் கட்டியெழுப்பியிருந்தார். இந்தநிலையத்திலே யுவர்களுக்கெல்லாம் உற்சாகமூட்டக்கூடியதாய் உந்நதமான ஆதாரபீடமொன்றின்மேல் தனதுஉயரியதோர் உருவச்சிலையை ஸ்தாபிக்கத் திட்டஞ்செய்திருந்தார். ஆயினும், இந்தஉருவச்சிலையை ஸ்தாபிக்குமுன்னமே அவாது சர்வாதிகாரஆட்சிநிலை ஓர்முடிவுக்கு வாலாயிற்று. அதுமுதல இத்தாலியின் சூழ்நிலைமுழுவதுமே மாற்றமடைந்துள்ளது. முசோலினியின் பாசிஸ்தயுவர்கள்நிலையம் தற்போது ஓர்கத்தோலிக்க அநாதசாலையாகக் காட்சியளிக்கின்றது. அவர் தனதுஉருவச்சிலையை நிறுவுதற்கென்று அமைத்த அந்தஉந்நத ஆதாரபீடம் இப்போதும் அங்கே இருந்துவருகிறது. ஆனால், அதன்மீது பரிசுத்ததேவதாயாரின் 40 அடி உயரமான பாரிய வெண்கலச்சுரூபம்ஒன்று நிறுவிநிற்கின்றது. தற்போது இத்தாலியபிள்ளைகள் தங்களுக்கு ஞானோற்சாகமூட்டும் தகுதிவாய்ந்த ஓர் திருச்சின்னத்தை — தங்கள் அன்பான பரலோக அன்னையின் திருச்சுரூபம்ஒன்றைக் கொண்டிருக்கிறார்கள்.

## மாபெரும் யுத்தக்கப்பல்

உலகின் மிகப்பிரமாண்டமான — மிகப்பலம்பொருந்திய யுத்தக்கப்பலாகிய 60,000 தொன் நிறைகொண்ட ''சறற்றோகா''என்ற அமெரிக்க விமானந்தாங்கிக்கப்பல் கட்டிமுடிந்து சென்ற 14-ந் திகதி சனிவாரமன்று நியூயோக்கிலே அதிகாரிகள்வசம் கையளிக்கப்படலாயிற்று. அமெரிக்க கடற்படைமந்திரியாரான திரு. சாள்ஸ் தோமஸ்அவர்கள் அவ்வேளை நடைபெற்ற வைபவத்திலே அங்குசமூகமாயிருந்த பிரபலஸ்தர்கள் குழுவிற்குத் தலைமைதாங்கிப் பேசியபோது: ''ஒரே யிடத்தில் எக்காலத்திலாவது ஒருங்குதிரட்டப்பெறும் மரணத்துக்கேதுவான பயங்கரஆயுதங்களைச் சேமிததுவைப்ப தற்குப்போதிய மிகப்பாரிய இடவசதியுடன்கூடியதாய் மிதந்துநிற்பதும், இடம்பெயர்ந்துசெல்வதும், போராடுவதுமான ஓர்விமானத்தளம்'' இதுவாகுமென்று இந்தமாபெரும் யுத்தக்கப்பலைப்பற்றிக் கூறலாயினர். இதனைக்கட்டும்வேலை மூன்றுவருடங்களுக்குமுன் ஆரம்பமாயிற்று. தற்சமயம சமுத்திரங்களில் நடமாடுகின்ற எந்த யுத்தக்கப்பலைக்காட்டிலும் இது மிகப்பாரியதும், மிகவேகமுடையதும், மிகச்சக்திவாய்ந்ததுமாகும். இதனை நிமிர்த்திக் குத்தென நிறுத்திவிடின் 'எம்பையர் ஸ்ரேற் பில்டிங்'என்ற மகா உந்நதமான அமெரிக்க மேல்மாடிக் கட்டடத்தின் 38-வது மாடியைத் தொட்டுநிற்கும். இந்தக்கப்பல் தனது தளத்தின்மேல் அக்கபக்கமாக உலகின் மகாப்பெரிய இருபிரயாணக்கப்பல்களை நிறுத்தக்கூடிய அத்துணை பெரும் விசாலமுடையதாகும்.

## புராதனகாலப் பிரேதப்பேழை

எகிப்திலே கெய்றோநகருக்குத் தென்மேற்கேயுள்ள பேயம்பகுதியிலுள்ள ஹோவாறாஎன்ற கூர்நுதிக் கோபுரத்தின் பிரேதசேமஅறையிலே நாலாயிரம் வருடங்களுக்குமுந்திய கருங்கல்சமாதிஒன்று கலவெட்டுகளுடன் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாய் எகிப்திய புராதனப்பொருள் ஆராய்ச்சிப்பகுதி சென்றபுதன்கிழமை தெரிவித்திருப்பதாகத் தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. இந்தக்கூர்நுதிக் கோபுரத்தின் மத்தியிலிருந்த சுண்ணக்கல் கட்டடத்தொகுதிகளில் ஒன்றை அகற்றியதைத் தொடர்ந்தே இது கண்டுபிடிக்கப்படலாயிற்று. பிரேதசேமஅறையின் கோணம்ஒன்றிலே 20அங்குலஉயரமுள்ள அழகானவெள்ளிப்பாத்திரம்ஒன்று இருக்கக்காணப்பட்டது. இது கி. மு. ஏறக்குறைய 2000 வருடங்களுக்குமுந்திய 12-வது இராசவமிசத்தைச் சேர்ந்ததென்பதை அதிலிருந்த கல்வெட்டுகள் தெரிவித்தனவென்று புராதன பொருளாராய்ச்சிப்பகுதி அதிகாரிஒருவர் அறிவித்துள்ளனர். பிரேதசேம அறையிலே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருப்பதால் இன்னுமே சமாதியைத்திறக்க முடியாதிருக்கிறதாம். இந்தச்சமாதி இராசகல்லறைஒன்றைச் சேர்ந்ததென நம்பப்படுகிறது. கெய்றோநகருக்குத் தென்மேற்கே 62மைல் தூரத்திலுள்ள பாஸம் ஒயெசிஸ்எனும் பாலைவனப் பசுந்தரைக்குச்சமீபமாக இது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

---

● ஒரு றாத்தல் தேன்சேர்ப்பதற்குத் தேனீஒன்று 43,776 மைல்தூரம் பறந்துசெல்கிறதென மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், சராசரியாக ஓர் தேன்கூடு ஏறக்குறையப் பதினேழு றாத்தல்தேனுல் செய்யப்பட்டிருக்கிறது.

## மரணசங்கதி

நாரந்தனைவாசரும், நமது அச்சகத்திலே கடமையாற்றி வருகிறவருமான திரு. எஸ். சவிரிமுத்து அவர்களின் இரண்டாவது புதல்வியான செல்வி மேரி எலிசா சென்ற 20-ந்திகதி வெள்ளிக்கிழமைபிற்பகல் எதிர்பாராதவிதமாக விபத்துக்குள்ளாய் மரணமாயினு என்னும் துயரசெய்திஅறிந்து மனம்வருந்தலானோம். மரிக்கும்போது இவவுக்குவயது பத்து. மறுநாட்சாயந்தாம் இவவின் பிரேதசேமமானது திரளான இனசனர், சிநேகிதர் கூடியசமூகத்திலே வீட்டிலும், கோயிலிலும், சேமக்காலையிலும் நாரந்தனைக் கட்டளைக்குரவர் வண. பி. வில்லியம் யேசுதாசன் சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடி அந்திமதிருச்சடங்குகள் நிறைவேற்றிக் கடைசிஆசீர்வாதங் கூறிநிற்கப் புதிய கல்லறையில் சிறப்பாகநடந்தேறியது. இவவைஇழந்து துன்புறும்பெற்றோர், சகோதரங்கள் மற்றும்இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்,

R. I. P.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சந்தியோகுமையோர் கோவிலில் மாதாந்தமுதல்வெள்ளிக்கு முந்திய தினம்நடக்கும் திவ்வியசற்பிரசாதஇராஆராதனைச் சந்திப்பாலும், திருஇருதயத்தின் இரக்கத்தாலும், பரிசுத்தசதாசகாயமாதா, தவறுதஅனுகூலம்தரும் அர்ச். சவேரியார், சகலஅர்ச்சியசிஷ்டவர்களினதும் மன்றாட்டினாலும் நான்கேட்டுவந்த உதவிகள் கிடைக்கப்பெற்றேன். யேசுவின்நாமம் என்றென்றும் புகழப்படுவதாக.

அன்ரன்.

---

## பஞ்சாங்க திருத்தம்

தற்போது பாவனையிலிருந்து வருகின்ற உலகபஞ்சாங்கத்தைத் திருத்தியமைக்க வேண்டுமெனப் பிறந்தஅபிப்பிராயம், ஐக்கியநாடுகளின் பொருளாதார — சமூகசபையாலே சென்ற 20-ந் திகதிவெள்ளிக்கிழமை காலவரையின்றியே ஒதுக்கிவைக்கப்பட்டதென்று நியூயோக்நகரிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. நெதர்லாந்தைச் சேர்ந்த திரு. சி. டபிள்யு. ஏ. ஷுர்மன் அவர்கள் அச்சபையில் பேசுகையில்: தமதுஎண்ணப்படி, சமயவாழ்க்கை சம்பந்தமான நியாயங்களைமுன்னிட்டும், பல்வேறுதிசைகளிலிருந்து கிடைத்த ஆட்சேபனைகளை முன்னிட்டும் உத்தேசிக்கப்பட்ட பஞ்சாங்க திருத்தத்தைப்பற்றி ஆலோசிப்பதற்குக் காலம் இன்னும்வாவில்லை எனக் கூறிநின்றார். அதனால், இதுவிஷயமாய்க்கலந்துவிவாதிப்பதைக் காலவரையின்றிப் பின்போடவேண்டுமென்றும், பொதுசன அபிப்பிராயத்தில் ஏதும் மாற்றம்ஏற்படுமானல் பஞ்சாங்கதிருத்தத்தில் கரிசனை கொண்டுள்ளவர்கள் இதுவிஷயத்தைத் திரும்பவும் எடுத்தாளலாமென்றும் இவர் கொண்டுவந்த பிரேரணை சபையிலே வாக்குக்குவிடப்பட்டபோது 15 பேர் இதற்குச்சாதகமாக வாக்களித்தனர். எவருமே மாறுக வாக்களிக்கவில்லை. கனடா, செக்கோசிலவக்கியா, சோவியற் ருஷியா மூன்றும் வாக்களியாது விலகிக்கொண்டன. திருத்தஞ்செய்தபஞ்சாங்கம் உலக பஞ்சாங்க சங்கத்தாலேசித்தஞ்செய்யப்பெற்று இந்தியாவாலே இருவருடங்களின்முன் ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின்முன் சமர்ப்பிக்கப்பட்டது. இது விஷயமாய் ஐக்கியநாடுகளின்ஸ்தாபன அங்கத்தவர்கள் சம்மதிச்சீட்டுகள் போட்டவிடத்து, சொற்ப ஆதரவே கிடைக்கலாயிற்று. திருத்தியமைத்த பஞ்சாங்கமும் பன்னிருமாதங்களையே கொண்டது. ஆனல், அது மும்மூன்று மாதங்கள்அடங்கிய நான்குபிரிவுகளையுடையது. ஒவ்வோர் மூன்றுமாதம் 13 கிழமைகளை அல்லது 91 நாட்களைக் கொண்டதாயும், ஓர் ஞாயிற்றுக்கிழமையில் தொடங்கி ஓர்சனிக்கிழமையில் முடிவதாயுமிருக்கும். தற்போது பாவனையில்இருந்துவருகின்ற கிறகோரியாரின் பஞ்சாங்கமும், திருத்தஞ்செய்த புதியஉலக பஞ்சாங்கமும் இவ்வருடம் தைமாதம் 1-ந்திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஏககாலத்தில் பொருந்தமாக வாலாயின. அதனல் இதற்கு முன்னமே திருத்தஞ்செய்த பஞ்சாங்கத்தை நடைமுறைக்குக் கொண்டுவர ஒழுங்குசெய்யப்பட வேண்டுமென்று இந்தியா தூண்டிவரலாயிற்று.

---

● மிருகங்கள்தான் இடத்துக்கிடம் பெயர்ந்துசெல்லக் கூடியனவென்றும், செடிகள் பூண்டுகள் அப்படிச்செல்லக் கூடியனவல்லவென்றும் இதுவரை சொல்லப்பட்டுவந்தது. ஆனல், ''சிலாமிடாமோனுஸ்'' என்றஓர்செடி இடத்துக்கிடம் பெயர்ந்துசெல்வதாகச் சமீபத்திலே கண்டறியப்பட்டிருக்கிறது.

● ஐக்கியஅமெரிக்கதேச ஜாக்ஸன் நகரிலே 23வயதுடையவரும், ஏறக்குறைய 640றாத்தல் நிறையுள்ளவருமான திரு. டபிள்யு. டி. கௌலன் என்பவர் 23வயதுடையவளும், 360 றாத்தல் நிறையுள்ளவளுமான திருமதி மேபெல் விற்கின்ஸ்எனும்மாதைச் சென்ற 15-ந் திகதி மணஞ்செய்திருக்கின்றார். ஊர்சுற்றும் காட்சிக் குழுவொன்றைச் சேர்ந்தஇவரின்பருமன் காட்சிப்பிரியர்களையெல்லாம் கவர்ந்துவருகிறதாம்.

● சுவாசப்பையில் ஏற்படுகின்ற கான்சர்எனப்படும் புற்றுநோய்க்குப் புதியதோர் கிருமிநாசினி மருந்தொன்றை அமெரிக்க நியூஜேர்ஸிநகர விஞ்ஞான ஆராய்ச்சிக் குழுவினர் கண்டுபிடித்திருக்கின்றனராம். ''டொன்'' என அறியப்படுகின்ற இந்தமருந்து பரிசோதனைநிமித்தமாக ஓர் குறித்தஅளவிலேயே தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறதாம்.

● நீரிழிவுரோகத்தைக் குணப்படுத்துதற்கென்று ''ஒறினேஸ்'' எனப் பெயரிய புதியமருந்துஒன்று கண்டுபிடித்துச்செய்யப்பட்டிருக்கிறது. இது இன்சூலினைப்போலில்லாது, மாத்திரைகளாகவும் இதனைப் பாவித்துக்கொள்ளலாம். இது ஒரு ஜேர்மன் மருந்தாகும். இது தரும்குணம் எவ்வளவாகுமென்பது இன்னுமே சரிவரநிரூபிக்கப்படவில்லை. விற்பனைக்குக் கிடைக்கக் கூடியதாயுமில்லை.

---


Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 26 1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சூசைமுனிவரின் மகிமை

சஞ்சூசை முனிவரைப்பற்றி நாமறிந்தது மிகச்சொற்பம். அவர்பிறந்த தினத்தையோ அன்றேல் இறந்த தினத்தையோ நாமறியோம். அவருடைய இளமைப் பருவத்தைப் பற்றியோ, வயோதிகத்தைப் பற்றியோ ஏதும் அறிந்திலேம். அவர் தச்சுத்தொழில் செய்தாரென்றும், அருள் நிறைந்த "நீதிமான்" என அவரைப்பற்றிச் சுவிசேஷங் கூறுவதையும் அறிவோம்.



சகல ஆண்பிள்ளைகளிலும் விசேஷம் பெற்றவரென்றும் அறிவோம். ஏனெனில், அரசர்கள், பட்டவர்த்தனர், மகுட வர்த்தனர், தனவந்தர் பலரிருக்கவும், ஏழமையில் மறைந்துகிடந்த இந்தத்தச்சனைத் தமது கைத்தாதையாகவும் காவலராகவும் சருவேசுரன் தெரிந்துகொண்டாரென்பதும் எமக்குத்தெரியும். பெண்களுள் பாக்கியம்நிறைந்த மரியாயின் பத்தாவாகச் சருவேசுரன் இவரை நியமித்ததும் நாமறிந்ததே. உலகில் வசித்த அதிபரிசுத்த குடும்பத்தின் தலைவரிவரென்றும் "வானம் பூமி யாவையும், அதிலடங்கிய யாவற்றையும் படைத்தகடவுள்" நசரேத்துவுக்குச் சென்று "அவருக்கு அமைந்து நடந்த"தையும் நாமறிவோம்.

சுத்தவாளரிற் சிலர் இப்புவியில் வாழுங்கால் கடவுளின் தரிசனை பெற்றார்கள். அத்தரிசனையின் ஆனந்தத்தை அவர்கள் மறக்கமுடியவில்லை. ஆனால், சூசையப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரோ தேவசுதனுடன் ஒரேபந்தியில் உண்டு, அருகில் உழைத்து, ஒரே இல்லத்தில் உறங்கிவாழும் வரம்பெற்ருர். "மாமிச ஐக்கியமான வார்த்தையை" முதற்காணும் பாக்கியம் அவருக்கும், அவருடைய பத்தினி மரியம்மாளுக்குமே கிடைத்தது. எரியுஞ் செந்தழல்போன்ற எகிப்திய பாலைவனத்தில் செல்லும்போது தமது இருபொக்ஷங்களையும் கண்ணேபோற் காத்து வந்தார். பாலிய யேசு யெருசலேமில் காணமற்போக, அன்னை மரியம்மாளுடன் அவரும் அவரைத் "துக்கத்துடன் தேடினுர்." சுவிசேஷம் சூசைமுனீந்திரனைப்பற்றி நமக்குக்காட்டும் கடைசிக் காட்சியென்ன? யேசுவும் மரியாயும் தேவாலயத்தை விட்டு நீங்கிச் சூசைமாமுனியுடன் நசரேத்துவுக்குச் செல்லுவதே.

சூசையப்பர் எவ்வருடத்தில் மரித்தாரென்பது எமக்குத்தெரியாது. இவர் யேசுவுக்குமுன் மரித்திருக்கவேண்டும். அல்லாவிடில் சிலுவையடியில் நின்றவர்களில் ஆடவராக அருளப்பர்மாத்திரம் நின்றிருககமாட்டார். ஆகையால் யேசு நசரேத்தில் சீவித்த அஞ்ஞாதவாச காலத்தில்தான் அவர்மரித்திருப்பார். அந்த ஏழைக்குடிசையில் யேசுவினதும் மரியாயினதும் அரவணைப்பில் மரணித்தார். சிறந்த சீவியத்துக்கோர் தகுந்த முடிவன்றோ.

எமது பிதாவாகிய பன்னிரண்டாம் பத்திநாதர் தொழிலாளியான அர்ச். சூசையப்பர் திருநாளை வைகாசிமாதம் முதற்கேதியில் கொண்டாடும்படி நியமித்திருக்கிருர். உலகமெங்கும் தொழிலாளர் தினமாக அனுசரிக்கப்படும் இத்தினத்தில் தொழிலாளரின் மாதிரியான அர்ச். சூசையப்பரைப் புகழ்ந்து போற்றுவது பூரணப் பொருத்தமுடையதேயென்க.

——*——

## அண்ணு சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

வைகாசிமாதம் முதலாந்திகதி நாம் ஒரு புதுத் திருநாளைக் கொண்டாடுவோம். அன்று அர்ச். சூசையப்பரைத் தொழிலாளரின் பாதுகாவலும் மாதிரியுமென நாம் சங்கிப்போம். நமது பரிசுத்தபிதாதாமே இவ்வேற்பாடு செய்திருக்கிருர்.

தற்காலம் பாட்டாளிமக்களின் காலம் எனலாம். உலகம் தொழிலை மேம்படுத்துங் காலம். தொழிலாளரின் உரிமைகளுக்காக வாதாடுங்காலம்.

உண்மையையும் நீதியையும் கடைப்பிடித்துச் செய்யும் எத்தொழிலும் இழிவுள்ளதல்ல. எத்தொழிலைச் செய்பவரும் அதைத்தமது ஆத்தும ஈடேற்றத்துக்கு ஏதுவாக்கிக் கொள்ளலாம். கொள்ளவேண்டுமென்பதே பரிசுத்த பிதாவின் படிப்பினை.

சூசைமாமுனிவரின் உத்தம மாதிரியின் பிரகாரம் நாமெல்லோரும் எமக்குரிய தொழிலை, கடமையைச் சரிவரச் செய்து உத்தமதனத்தையடைய வேண்டும்.

**உங்கள் அன்புள்ள,**

**அண்ணு.**

கோயிலுக்குள் கதைப்பது ஆண்டவருக்கு அநாசாரம், அயலானுக்குப் பராக்கு, எமக்குப் பயனற்றது.

"என்வீடு செபத்தின் வீடு"

எல்லோருடையவும் சுதந்திரத்தையும் உரிமைகளையும் மதிக்கும் தனிமனிதரின் சுதந்திரமும் உரிமைகளுமே எமது தேசீயவாழ்க்கையின் மூலைக்கல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்குத்தான் உற்றுப்படி

உன் மனச்சாட்சி பரிசுத்தமாகவும், உன்சீரணசக்தி கூர்மையாகவும், உன்சிநேகிதர்கள் நம்பத் தக்கவர்களாகவு மிருந்தால் உன்னைவிட லட்சாதிபதி உலகத்தில் யாருண்டு ?

* * *

தன்னுடைய கஷ்டத்தைக் கவனிக்காமல் மற்றவர்களுடைய உரிமையையே கவனிப்பவன் உத்தம கிறீஸ்தவனுவான்.

* * *

வைரக்கல்லைத் தேய்த்தால் தான் பளபளக்கும். ஆத்துமத்தையும் சரீரத்தையும் அடக்கி ஒடுக்கிச் சீவித்தால்தான் உன்னிடத்தில் சோதிப்பிரகாசமுண்டாகும்.

* * *

களங்கமற நினைப்பதும், நினைத்ததைக் களங்கமறப் பேசுவதும், பேசுவதைப் பிழையறச் செய்து முடிப்பதும்தான் நல்ல கிறீஸ்துவனின் சீவியலட்சணமாகும்.

## வாழ்வின் குறிக்கோள்!

மாலையைச் சூடியென், மணமதைப் பூசியென், சாத்திரம் கற்றுமென், சான்றோனுகியென், அடலேறனைய அழகனுய்த் திகழ்ந்துமென், பூவினைப் புரந்துமென், புகழினைப் பொறித்துமென், தாரமும் மக்களும் தழைத்தே யோங்கியென், ஆளொடு அடிமை குடிமையுமாண்டுமென் ஆருயிர்த் துணையாம் அறத்தாறின்றேல், ஆழிசூழ் உலகில் ஆண்டவன் தந்த வாணுளெல்லாம் வீணுளாகி ஆழ் குழி நரகுக் காளாவோமே.

ச. கீதபென்கலன், சில்லாலை.

## நான்பெற்ற அனுபவம்

— M. J. M. —

சென்றவார இறுதியில் நான்மடுவிற்குப் போனேன். மூன்று நாட்களாக நான் அங்கு தங்க நேரிட்டது. ஓர் விசேட அனுபவம் எனக்குக்கிடைத்தது.

அங்கு மரியாயின்சேனைச் சமாகமம் மூன்றுநாட்களாக நடைபெற்றது. முதியோர், நடுவயதினர், இளைஞர், பள்ளி மாணவர்பலர் இலங்கையின் பலவிடங்களிலிருந்தும் வந்திருந்தனர். இம் மூன்று நாட்களிலும், செபம், பிரசங்கம், உபந்நியாசம், குழுஆலோசனை முதலியவற்றில் எல்லோரும் ஈடுபட்டிருந்தனர். பெரிய உத்தியோகஸ்தர் ஏழைத் தொழிலாளிகளுடன் கலந்தாலோசனை செய்தனர். இதெல்லாம் தங்கள்வேலை நாட்களிலல்ல. அரசாங்க ஓய்வுநாட்களிலேயே நடந்தன.

காலி, மாத்தறை, பருத்தித்துறை, கொழும்பு, நீர்கொழும்பு, குருநாகல், மட்டக்களப்பு, திரிகோணமலை, புங்குடுதீவு முதலாம் இடங்களிலிருந்து பன் நெடுங்காதவழி கடந்து, தமது சொந்தச் செலவில் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

என்ன அலுவல் பார்த்தார்கள்? திருச்சபையாம் கிறீஸ்துவின் மறையுடலில் கிறீஸ்துவனின் பங்கென்ன? அம் மறையுடலை வளர்க்க மரியாயின் சேனை மூலம் அவன் என்ன செய்யலாம்? என்று ஆலோசிப்பதே நோக்கமாயிருந்தது.

இதிலிருந்து நான்பெற்ற அனுபவமென்ன? எமது கிறீஸ்தவ மக்கள் தாராளமனம் நிறைந்தவர்கள். தமது ஆத்தும இரட்சணியத்திலும் பிறர் ஆத்தும இரட்சணியத்திலும் அதிகசிரத்தையுள்ளவர்களென்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர்களின் ஆதரமே!

பாலகனைப் பொற்கரத்தி லேந்திவளர்த் தோனே!
பங்கயக்கை எங்களையும் தாங்கியணைப் பாயே!
காலமெலா முன்கழுத்தைக் கட்டியணைத் தேநாம்
கண்ணுறங்க விண்ணுலகின் காட்சிதரு வாயே!

கோபமெனும் தீமையெமைக் கொல்லுகின்ற போது
கொஞ்சியெமைப் பேயணைத்துக் கொள்ளுகின்ற போது
தூமணியே! உன்பொறுமைப் போர்வையினைப் போர்த்துத்
துன்பமெல்லாந் தீர்த்திடவே கெஞ்சியிரந் தோமே!

மாதவனே! பாலர்களின் ஆதரமே! நாங்கள்
மண்ணுலகி லோடிவிளை யாடுகின்ற போதில்
நீதியொடு தாழ்மைநிறை கற்புமலர் தேடி
நிர்மலப்பொன் மாலைகளைச் சூடவருள் வாயே!

உன்னருமைப் பத்தினியாம் தாய்மடியின் மீது
உத்தமராய் நாமிருந்து கொஞ்சிவிளை யாட
நன்மரணம் தந்தருள நீமறந்து போனல்
நாமுலகில் வாழ்வதிலே என்னபய னுமோ?

## ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, அன்றேல் தாழ்வு

மிருகஇராசன் வாழ்ந்துவரும்அடர்ந்த வனத்தில் நான்கு எருதுகள் ஒற்றுமையாக வாழ்ந்துவந்தன. இந்த ஒற்றுமையைச் சிதைக்க மிருகஇராசனல் பல முயற்சிஎடுத்தும் காரியம்சரிப்படவில்லை. ஒருநாள் நான்கு எருதுகளுக்கும் இடையில் பிணக்கு ஏற்பட்டது. இதன்விளைவாக நான்கு எருதுகளும் மூலைக்கொன்ருகப் பிரிந்துபோயின. இதனை அறிந்த வனராசன் இதுதான்தருணம் என்று ஒவ்வொன்ருகக் கொன்றுவிட்டது. அருமையானவர்களே! விளங்கிக் கொண்டீர்களா கதையின் கருத்தை?

க. இம்மனுவேல்,
மூகமாலை.

---

உங்கள் விஷயதானங்களை மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்:

"அன்னு", சஞ்சூசையப்பர் தாபனம்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org